
சருவேசுரனுடைய அர்ச். மாதா பிரசீடியம்

# பொன்விழா மலர்




புனித மிக்கேல் ஆலயம் - உரும்பிராய்

உரும்பிராய்

# புனித மிக்கேல் ஆலயம்

## சருவேசுரனுடைய அர்ச். மாதா பிரசீடியம்

## 50ஆவது ஆண்டு

# ஜூபிலி மலர்

உரும்பிராய்

12. 10. 2014

# சமர்ப்பணம்


"சருவேசுரனுடைய அர்ச். மாதா"
பிரசீடியத்தின் இறந்துபோன
அங்கத்தவர்களுக்கும்
பங்குத்தந்தையர்களுக்கும்
இம்மலரை
இதழ்களாய் விரித்துத்
தூவுகின்றோம்






திருத்தந்தை பிரான்சிஸ்


யாழ். மறைமாவட்ட ஆயர்



பேரருட்திரு

இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

மன்னார் மறைமாவட்ட ஆயர்



பேரருட்திரு

இராயப்பு யோசேப்பு ஆண்டகை

# பொருளடக்கம்

**இதழ் ஒன்று**

ஆசியுரைகளும், வாழ்த்துரைகளும் 01–34

**இதழ் இரண்டு**

தகவல்களும், ஒழுங்குகளும் 35–43

**இதழ் மூன்று**

ஆக்கங்களும், சிந்தனைகளும் 44–61

**இதழ் நான்கு**

தெசரா காட் விளக்கம், சேனைப்படம் 63–64

## மலரை நுகர முன்...

உரும்பிராய் பங்கின் "சருவேசுரனுடைய அர்ச். மாதாவே" என்ற மரியாளின் சேனை தனது 50வது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்ற இந்த வேளையில் இதன் நினைவாக இந்த "பொன்விழா மலரை" வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இம்மலரின் நோக்கம் மரியாயின்சேனையின் முக்கியத்துவத்தையும் எமது மரியாயின் சேனையின் வரலாற்றையும் ஆவணப்படுத்தவதும், இன்னும் மரியாயின் சேனையினரை ஊக்கவிப்பதும் ஆகும்.

50 ஆண்டுகள் பயணித்து பல தடைகளை தாண்டி இன்னும் மலர்ந்து கொண்டிருக்கிறதென்றால் இது இறைவனின் ஆசீர்வாதமும், பலரின் உழைப்பும், தியாகமும் என்று கூறினால் அது மிகையாகாது. ஆரம்பகால உறுப்பினர்களையும், ஸ்தாபகர் அருட்தந்தை பெனற் கொண்சன்ரையின் அடிகளாரையும் இன்னும் பங்குத் தந்தையர்களையும் நாம் நினைவில் கொண்டு பாராட்டுகின்றோம். விசேட விதமாக தொடக்கத்திலிருந்து பணியாற்றி தற்போது இறந்துபோன உறுப்பினர்களையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவர்களின் ஆன்மாக்கள் இறைவனில் சாந்தியடைய செபிப்போம்.

இம்மலர் சிறப்பாக மலர ஆசியுரைகள், வாழ்த்துரைகள், ஆக்கங்கள், தகவல்கள் போன்றவற்றை தந்துதவியவர்கள், பண உதவி செய்தவர்கள், அனைவருக்கும் எமது நன்றிகள். விசேட விதமாக பங்குத் தந்தை அவர்களுக்கும், மரியாயின்சேனை அங்கத்தவர்களுக்கும், இம்மலரை சிறப்பாக அச்சிட்டுத்தந்த பண்டத்தரிப்பு J.S. அச்சகத்தினருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

நன்றி

**– மலர்க்குழுவினர்**

# யாழ் ஆயரின் ஆசிச்செய்தி



உரும்பிராய் சருவேசுரனுடைய பரிசுத்த மாதா பிரசீடியம் தனது 50வது ஆண்டு ஜுபிலி தினத்தைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். மேற்படி பிரசீடியம் ஆரம்பிக்கப்பட்டு 50 வருடத்தை நினைவு கூருகின்றது. 1964ம் ஆண்டு அன்றைய பங்குத்தந்தையாக இருந்த அருட்தந்தை பெனற் கொன்சன்ரைன் அடிகளாரின் அயராத முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது.


பல்வேறு உலகத்தின் சவால்கள், துன்பங்கள், துயங்கள், நெருக்கீடுகள், பிரச்சினைகள் வந்த போதிலும் அவற்றை நல்ல மனத்துடன் ஏற்று மரியாளின் வாழ்வை பின்பற்றியவர்களாய் "இதோ ஆண்டவருடைய அடிமை உமது வார்த்தையின் படி" என்ற வார்த்தைக்கு ஏற்ப தங்களை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தவர்களாக வாழ முயற்சிக்கின்றார்கள். இப்படியாக வாழ முயற்சிக்கின்ற போது உரும்பிராய் பங்கிலே மரியன்னைக்கு புகழ் சேர்ப்பதை எண்ணி பெருமிதம் அடைகின்றேன். அன்னைக்கு எதிராக எழும்பும் சவால்களை எல்லாம் இக்காலத்தில் எதிர்த்து நின்று அன்னையின் வீரர்களாக போராடுகின்ற சேனையில் சேர்ந்து தீமைக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெற ஆசிக்கின்றேன்.

கடந்துவந்த பாதையில் அன்னை உங்களை வழிநடத்தியதைப் போல இனிவரும் காலங்களிலும் அன்னையின் வழிகாட்டலும் பரிந்துரையும் உங்கள் மீது நிறைவாய் இருப்பதாக.

இந்த வகையில் 50 வருடங்கள் நிறைவுபெற்றதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். உங்கள் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன். தொடர்ந்து சருவேசுரனுடைய பரிசுத்த மாதா பிரசீடியம் இன்னும் பல ஆண்டுகள் நிலைத்திருக்கவும், தங்கள் பங்கில் பல பிரசீடியங்களை உருவாக்கவும் வேண்டி நிற்கின்றேன்.

கிறிஸ்துவில் அன்புடன்
*மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை*
யாழ் ஆயர்

# மன்னார் ஆயரின் ஆசிச்செய்தி



யாழ். மறை மாவட்டத்தின் உரும்பிராய் பங்கின் பங்குத்தந்தையாக நான் பணியாற்றிய கால நாட்கள் எனது வாழ்வில் என்றும் பசுமையான நினைவுகளாக நிழலாடுகின்றன. அந்தவகையில் சருவேசுரனுடைய அர்ச்சியஷ்ட மாதா பெயரில் பிரசீடியமாக கடந்த 50 வருடங்களாக செவ்வனே இயங்கும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய மரியாயின் சேனை தனது தோற்றுவாயின் பொன்விழாவை கண்ணுற்றுள்ள மகிழ்ச்சியான தருணத்தில் இச்சேனையினரின் அர்ப்பணிப்பை நான் வெகுவாகப் பாராட்டி வாழ்த்துவதோடு பொன்விழா நிறைவின் பரிவாக அமைவுறும் மலருக்கு ஆசிச்செய்தி வரைவதில் அகமகிழ்கிறேன்.

உறுப்பினர்களைப் புனிதப்படுத்துவதன் வாயிலாக கடவுளை மகிமைப் படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு மரியாயின் சேனை இயங்கி வருகின்றது என்பதை சேனையினர் அறிவர். அதனை செபமும், சேவையும் கொண்டே அடைய முடியும் என்பதை மரியாயின் சேனை நிறுவுனர் பிராங்க்.ஃ.ப் எடுத்துரைக்கிறார். உரும்பிராய் பங்கின் புனித மிக்கேல் ஆலய மரியாயின் சேவையினர் தேவைகள் வேண்டி நிற்போருக்காகவும், பிரிந்துபோன குடும்பங்கள் ஒன்று சேர வேண்டுமென்பதற்காகவும் செபிப்பதோடு இறந்த வீட்டிலும் செப வழிபாடுகளை நடாத்துவதை அறியக்கூடியதாக இருக்கிறது.

அத்தோடு நோயாளரைத் தரிசித்தல், துன்பப்படுவோருக்கு ஆறுதல் கூறுதல், பங்கு பணிகளுக்கு உதவுதல், வழிபாடுகளுக்கு ஆயத்தம் செய்தல் என பல பணிகளையும் ஆற்றி வருவதாக நான் கேள்வியுறுகிறேன். அந்தவகையில் செபமும், சேவையும் செய்து தம்மைப் புனிதப்படுத்தி கடவுளை மகிமைப்படுத்தும் மரியாயின் சேனையினரின் நோக்கத்தை நிறைவேற்ற முயலும் இவ்வாலய சேனையினருக்கு எனது உளப்பூர்வமான பாராட்டும் ஆசீரும் என்றும் உண்டு.

நான் உரும்பிராய் பங்கின் பங்குத் தந்தையாக பணியாற்றிய காலத்தில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய மரியாயின் சேனையினர் ஆர்வமாக தங்கள் பிரசீடிய அமர்வுகளை நடாத்துவதையும், அக்கூட்டங்களில் நான் ஆன்மீக உரைகளை வழங்கியதையும் இன்று நினைவுபடுத்திப் பார்க்கிறேன். தமது பிரசீடியம் உருப்பெற்று 50 வருடத்தை நிறைவுசெய்து மனமகிழ்வில் கடவுளுக்கும், அன்னை மரியாளுக்கும் இதய நன்றிகளை உரும்பிராய் பங்கு சேனையினருடன் இணைந்து நானும் இறைபண்பாடி இறைவனின் தாய்க்கு நன்றி நவில்கிறேன்.

அந்த தேவதாயிடம் விளங்கிய ஆழ்ந்த தாழ்ச்சி, குறையற்ற கீழ்ப்படிதல், இடையறாத செபப்பற்று, நீடித்த ஒறுத்தல், பழுதற்ற கற்பு, பொறுமை, தெய்வீக ஞானம், தியாகம், இறையன்பு,ஈடு இணையற்ற விசுவாசம் ஆகிய மனப்பான்மையை சேனையின் மனப்பான்மையாகக் கொண்டு ஒழுகி தொடரும் வருடங்களிலும் மென்மேலும் சேனையினரின் செபமும், செயற்பாடும் வளர்ந்தோங்க எனது மனம் நிறைந்த நல்லாசீரையும் செப வாழ்த்துக்களையும் வழங்கிநிற்கின்றேன்.

கிறிஸ்துவின் பணியில்

*மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை*

மன்னார் ஆயர்

# குருமுதல்வரின் ஆசிச்செய்தி



உரும்பிராய் சருவேசுரனுடைய பரிசுத்த மாதா பிரசீடியம் தனது 50வது ஜூபிலி விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். அருட்தந்தை பெனட் கொண்சன்ரையின் அடிகளார் விதைத்த வித்து தற்போது பெரும் விருட்சமாக வளர்ந்து பலன் கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்று நினைக்கும் போது மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த பிரசீடியத்தைச் சேர்ந்த அனைத்து அங்கத்தவர்களையும் வாழ்த்துகின்றேன். நீண்ட பயணத்தைச் சளைக்காது தொடர்ந்து வந்திருக்கின்றீர்கள். கஸ்டங்கள் துன்பங்கள் ஊடாக பயணித்து 50 ஆண்டுகளைக் கடந்து இன்று மகிழ்ச்சியில் நிறைந்திருக்கின்றீர்கள், இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

மரியாயின் சேனையினரின் பணிகள் பங்கில் மிகவும் முக்கியமானது நோயாளரை சந்தித்தல், வீடு தரிசித்தல், பங்கு குருக்களுக்கு உதவியாக இருத்தல், மறைக்கல்விக்கு உதவிசெய்தல், மற்றைய சமயத்தவரை அருட்சாதனங்களுக்கு ஆயத்தப்படுத்துதல் போன்ற பணிகள் சிறப்பாக மரியாயின் சேனையினரால் எடுக்கப்படுகின்றன. இன்னும் குருக்களுக்காக செபித்தல், தேவ அழைத்தலுக்காக செபித்தல் போன்றவை மரியாயின் சேனையினரின் பணியாக கொள்ளப்படுகின்றது. சேனையினரின் ஒழுங்குகள், சட்டங்கள் போன்றவைகளை மிகச் சிறப்பாகக் கடைப்பிடிக்கின்ற போது மரியாளின் மனநிலையைக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

சேனையினர் பங்குகளின் குடும்ப செபமாலை பக்தியை ஊக்குவிக்கவும் மரியாளின் பக்தியை ஊக்குவிக்கவும் முன்வரவேண்டும். "கூடி செபிக்கும் குடும்பங்கள் கூடிவாழும்" என்பதற்கமைவாக செபத்தில் நிலைத்திருக்க ஊக்குவிக்க வேண்டும். மரியாள் எவ்விதம் இறை வார்த்தையை உள்வாங்கி தியானித்து செயற்பட்டாளோ, அதேபோல் உங்களது பணியும் இருக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து எனது அன்பு கலந்த வாழ்த்துக்களையும் கூறி நிற்கின்றேன்.

*அருட்பணியாளர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்*
யாழ். மறை மாவட்ட குருமுதல்வர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

# ஆன்மீக இயக்குனரின் ஆசி



உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய மரியாயின் சேனை தமது 50ம் ஆண்டு ஜுபிலி விழாவாகக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதும் மகிழ்ச்சிக்குரியதும் ஆகும். இச்சேனையில் நீங்கள் நீண்ட தூரம் பயணித்து இருக்கின்றீர்கள் நல்ல வளர்ச்சியையும் கண்டுள்ளீர்கள். பங்கில் நாலா பக்கங்களிலும் புன்னாலைக்கட்டுவன், யூலனூர், நீர்வேலி போன்ற ஊர்களில் உருவாகி செயற்பட்டுக்கொண்டிருக்கும் பல பிரசீடியங்கள் இதற்கு சான்றாக அமைகிறது. இக்காலப்பகுதியில் இருந்து பின்னோக்கிப் பார்க்கும் பொழுது முன்னைய நாட்களில் பணியாற்றிய மரியாயின் சேனை அங்கத்தவர்களுக்கு நாம் எவ்வளவோ கடமைப்பட்டு இருக்கின்றோம். செயற்திறன் மிக்க அலுவலர்கள், ஆழமான பக்தியும், ஆர்வமும் கொண்ட அங்கத்தவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட செப வாழ்வும் கடின உழைப்பும் அர்ப்பணமும் கொண்ட சேவைகள் தான் இன்று பங்கிலே மரியாயின் சேனை நீண்ட தூரம் வளர்ந்து வருவதற்கு காரணமாக உள்ளது. தற்போதைய அங்கத்தவர்களது ஆக்கமும் ஊக்கமும் இந்த வளர்ச்சிக்கு வலுவூட்டியுள்ளது.

இனிவரும் ஆண்டுகளில் மரியாயின் சேனை, இரு மடங்கு வளர்வதற்கு இன்று இருக்கும் மரியாயின் சேனை அங்கத்தவர்களாகிய உங்களின் கரங்களில்தான் தங்கியுள்ளது.

உலகளாவிய அளவில் பரந்திருக்கும் மரியாயின் சேனை அங்கத்தவர்களை ஒன்றுசேர்த்து வைத்து செயற்படுவது ஒன்று அன்னை மரியா மீது கொண்டுள்ள ஆழமான பக்தி, மற்றையது கைநூல் ஆய்வும் அறிவும். ஒவ்வொரு அங்கத்தவர்களும் கைநூலை நன்கு கற்று விளங்கி வைத்திருத்தல் வேண்டும். சேனையின் நோக்கம், மனப்பான்மை, பக்தி, அடிப்படைக் கடமைகள், அர்ப்பண ஊழியம் பற்றி தெளிவான முழுமையான அறிவு கொண்டிருப்பது அவசியம். இது சேனையாரை உறுதி மிக்கவர்களாக உருவாக்குகிறது, பலப்படுத்துகிறது. உங்கள் பங்கில் மரியாயின் சேனை, வழிகாட்டும் கலங்கரை விளக்குப்போல், மரியன்னையின் வழிநடத்துதலில் பிரகாசிக்க வாழ்த்தி நிற்கின்றேன்.

*அருட்பணியாளர் ம. றெஜி இராஜேஸ்வரன்*
மரியாயின் சேனை ஆன்மீக இயக்குநர்,
யாழ் மறைமாவட்டம்.

# பங்குத்தந்தையின் ஆசி



"சருவேசுரனுடைய அர்ச். மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"

உரும்பிராயின் சருவேசுரனுடைய அர்ச். மாதா என்னும் பெயருடைய மரியாயின் சேனையின் பொன்விழாவைக் கொண்டாடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்து வந்த பாதைகள் எமக்கு அனுபவமாகவும், இனி நடக்க போகின்ற பாதைகள் எமக்கு இலக்காகவும் இருக்க வேண்டும். 50 ஆண்டுகள் இறைவனின் உதவியோடும், மரியன்னையின் பரிந்துரையோடும் பயணித்திருக்கின்றீர்கள் என்பதை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுவோம். மரியாயின் சேனையினர் இவ்வருடம் தாங்கள் பொன்விழா ஜூபிலியைக் கொண்டாட வேண்டும் என்று என்னிடம் அணுகியபோது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால் இந்த சேனையிலேயே 50 ஆண்டுகள் தொடர்ந்து பயணித்தவர்களும், ஆரம்பகால உறுப்பினர்களும் இருக்கின்றார்கள். இவர்களின் உழைப்பும் ஆர்வமும்தான் தற்போது இயங்கும் மரியாயின் சேனையை இன்றும் உயிர்த்துடிப்புள்ளதாகவும், மரியாளுக்கு இன்னும் புகழ்தேடிக் கொடுப்பதாகவும் இருக்கின்றது. இவர்கள் சோர்ந்து போகாமல் சலிப்புத் தட்டாமல் இன்னும் வேகமாகவும், ஆர்வமாகவும் செயற்படுகின்றார்கள் என்று நினைக்கும்போதும் தாங்கள் சென்ற வாரத்தில் தாம் செய்த பணிகளை அறிக்கையிடும் முறையும், சேனையினரின் மனநிலையும் சிறப்பானதாக இருந்தது.

இன்னும் சகோதரிகள் என்று ஒவ்வொருவரையும் அழைக்கும்போது அவர்களுக்கிடையில் இருக்கும் இறுக்கமான உறவுநிலை இன்னும் ஆழமாக்குவதற்கு உறுதுணையாக இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இன்னும் சேனையர்கள் எல்லோரும் சமமானவர்கள் என்பதை மிகவும் குறிப்பாக இவர்களின் செயற்பாட்டினூடாக காணக்கூடியதாகவுள்ளது. தங்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள், போட்டிகள், பிரிவினைகளை அகற்றி எல்லோரும் சமம் என்ற சமத்துவத்தை பேணும் நிலையை காணக்கூடியதாக உள்ளது.

உரும்பிராய் சருவேசுரனுடைய மாதா பிரசீடியத்தில் அங்கம் வகிக்கும் எல்லா உறுப்பினர்களுக்கும் எனது மனப்பூர்வமான ஜூபிலி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மரியே வாழ்க, ஆண்டவர் உம்முடனே"

**அருட்பணியாளர் ஆ. யூட் நிக்ஷன்**
பங்குத்தந்தை
உரும்பிராய்

# கொமிற்சிய தலைவரின் வாழ்த்துச் செய்தி



உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப்பங்கில் சருவேசுரனுடைய அர்ச். மாதா பிரசீடியம், "என் அரசியே என் தாயே, நான் முழுவதும் உமக்கே சொந்தம், என்னிடமுள்ளதெல்லாம் உமக்கே சொந்தம்" என்று மரியன்னையிடம் முழுமையாக அர்ப்பணம் செய்து அவருடன் இணைந்த சேவையில் ஐம்பது ஆண்டுகள் கடந்துள்ளதைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

(மத். 12:33) ஒரு மரத்தின் கனியைக் கொண்டு அம்மரத்தை அறியலாமென்றும், நற்கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படுமென்றும் இறை வார்த்தைகள் கூறுகின்றன. கடந்த பல வருடங்களாக எமது நாட்டில் தலைவிரித்தாடுகின்ற பல்வேறு சமூக அரசியல், பொருளாதார தாக்கங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரும்பாடுபட்டுழைத்த இப்பிரசீடியம், ஆன்ம இயக்குனர், நிர்வாகசபை உறுப்பினர்கள், சேனையாளர்கள் ஒவ்வொருவரும் இவ்வேளையில் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மரியாயின் சேனை ஊழியர்கள் ஏனைய பக்திசபையினரைப் போலல்லாது தூய்மை, பிரமாணிக்கம், தாழ்ச்சி, துணிவு, பிறரன்பு ஆகிய பண்புகளைக் கொண்ட அப்போஸ்தலிக்க தொண்டர்களாயிருக்கிறார்கள். இன்றைய சமுதாயப் பின்னணியில் சேனையாளர்கள் தமது தூய்மையைப் பேணுவதும், பாதிக்கப்படும் மக்களை அணுகி சேவையாற்றுவதும் மரியன்னையின் மேல் வைக்கும் இறுக்கமான உண்மையான பக்தியில்தான் தங்கியுள்ளது.

அந்தவகையில் சருவேசுரனுடைய அர்ச். மாதா பிரசீடியம் இன்று விழாவெடுத்து, மலரொன்றை வெளியிட்டு தனது சேவையின் சிறப்புக்களை அளவுகோலாக பதிந்து வைத்துள்ளதையிட்டு பெருமை கொள்கின்றேன். அத்துடன் அதனை ஒரு வரலாற்று நிகழ்வாக்குவதற்கு ஒரு சிறந்த நிர்வாகசபையை மரியன்னை மூலம் தெரிந்தெடுத்ததற் காகவும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுவதுடன், தங்கள் செப, பணி வாழ்வுகள் தொடர இறைவனிடம் வேண்டி நிற்கின்றேன்.

'மரியாயே வாழ்க'

*திரு. பே. மரிய கருணைநாயகம்*
தலைவர், யாழ் கொமிற்சியம்

# மண்ணின் மைந்தனின் ஆசி



மரியாயின் சேனையின் பொன்விழாவையொட்டி ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சருவேசுரனுடைய பரிசுத்த மாதா எனும் பெயரோடு இயங்கும் உரும்பிராய் மரியாயின் சேனை, இப்பொழுது புதுப் பொலிவுடன் இயங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மரியாள் அனைத்துலகத்திற்கும் தாய் எனும் உயர்நிலையில் இருப்பதற்கு மிகவும் முக்கியமான காரணம் அவளிடம் காணப்பட்ட மிகவும் எளிமையான வாழ்வு, தூய்மையான உள்ளம். "இதோ நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்று தன்னையே முழுக்க இறை வார்த்தைக்கு அடிமையாக்கிக் கீழ்ப்படிந்தார். தொடர்ந்து அவளுடைய வாழ்வை நோக்குமிடத்து "ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது" என்ற பெறுபேறுகளின் வார்த்தை மிகவும் ஆழமாக மரியாளினுடைய வாழ்வையும் அவளிடம் காணப்பட்ட தூய உள்ளத்தின் பதிவுகளையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

எவ்வளவிற்கு நாம் எம்மை தாழ்த்திக் கொள்கின்றோமோ, அவ்வளவிற்கு இறைவன் எம்மை உயர்த்துவார் "தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகின்றார் (லூக் 1:53) என்ற தூய லூக்காவின் நற்செய்தி மரியாளினுடைய வாழ்விற்கு முழு எடுத்துக்காட்டாகின்றது.

மரியாளின் எளிமையான வாழ்வையும் தூய்மையான உள்ளமும் கொண்டு வாழ சேனையராகிய அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர். எனவே பொன்விழா என்பது வெறுமனே கொண்டாட்டமாக மட்டுமல்லாது மரியாளின் மனநிலையை எம்முள்ளத்தில் உருவாக்குவதே நாம் மரியாளுக்குக் கொடுக்கும் பொன்விழாப் பரிசாகும்.

மரியாயின் சேனையினருக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் அன்பையும் செபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடர்ந்து மரியாயின் சேனையினரை வாழ்த்தி ஆசிக்கின்றேன்.

*அருட்பணியாளர் ம. போல் நட்சேத்திரம் அமதி*
கனடா

# மண்ணின் மைந்தனின் ஆசி

**மரியாளைப் போன்று 'விரைந்து செயற்படும்' உரும்பிராய் மரியாயின் சேனை**



உரும்பராய் புனித மிக்கேல் ஆலய மரியாயின் சேனையினர் தமது சபையின் பொன்விழாவைக் கொண்டாடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இம்மரியாயின் சேனையினர் மாதாவின் வழிநின்று அளப்பரிய ஆன்மீக, சமூக, குடும்பநலச் சேவை பல ஆற்றி வருகின்றனர் என்பது பெருமைப்பட வேண்டிய விடயம். புனித மிக்கேல் பழைய ஆலயம் மண் தளம் கொண்டதாக இருந்த காலத்தில் சாணிபோட்டு அழகாக மெழுகி நம் மக்கள் சௌகரியத்தோடு திருப்பலியில் கலந்துகொள்ள உதவியவர்கள் இவர்கள். பின்னர் அருள்திரு இராயப்பு யோசப்பு (தற்போதைய மன்னார் ஆயர்) பஞ்சம் நிறைந்த காலத்தில் தற்போதைய ஆலயத்தை கட்ட ஆரம்பித்தபோது பிடி அரிசி சேர்ப்பது மற்றும் மக்களின் பங்களிப்புகளைப் பொறுப்போடு சேகரித்துக் கொடுத்து இவ்வாலயத்தின் கட்டட வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவர்கள் இவர்கள். மேலும் பாதுகாவலன் பத்திரிகையின் விற்பனையில் மும்முரமாகச் செயற்பட்டவர்கள்.

மேற்குறிப்பிட்டவற்றுக்கும் மேலாக, மாதா பக்தியை வளர்ப்பதில் இவர்களின் பங்களிப்பு மிகப்பெரியது. மாதாவின் வணக்க மாதங்களில் மாதாவின் திருச்சுருபத்தை வீடு வீடாக எடுத்துச் செல்வதும் செபமாலை சொல்லி குடும்பங்களில் மாதா பக்தியை புத்துயிர் பெறச் செய்வதும் இவர்கள் மனமுவந்து செய்து வருபவதை. குடும்பங்களிடையே ஒற்றுமையும் அன்பும் நிலவ அறிவுரை கூறி வருபவர்கள். சிறப்பாகப் பங்கக்குருவின் குருப்பட்ட நாட்களில் இவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு செயற்பட்டு அந்நிகழ்வு நெஞ்சம் நிறைந்ததாக அமைய முழு மனதாக உதவுகின்றவர்கள். அத்தோடு எனது குருப்பட்டத்திற்கு இவர்கள் செய்த பங்களிப்பை இன்றும் நன்றியோடு பசுமையாக நினைக்கின்றேன். இன்றுவரை இவர்கள் என்மீது காட்டும் பாசத்தை எண்ணி மகிழ்கின்றேன்.

மாதா எலிசபெத்தம்மாளுக்கு உதவிட 'விரைந்து' சென்றது போல இதன் அங்கத்தவர்கள் தொடர்ந்து செயற்படவும் பிறர் வாழ்வை மாதா போன்று மலரச் செய்யவும் ஆழ்ந்த பக்தியில் மிளிர்ந்திடவும் இவர்களது பொன்விழாவில் இதயம் கலந்த நன்றியோடு வாழ்த்தி நிற்கின்றேன்.

*அருட்பணியாளர் இராசேந்திரம் ஸ்ரலின்*
யாழ். பல்கலைக்கழக ஆன்மீக இயக்குநர்

# மண்ணின் மைந்தனின் ஆசிச்செய்தி

எனது பங்கு மரியாயின் சேனையினர் தங்களது பொன்விழாவை நினைவு கூருவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். மரியாயின் சேனையின் பணியும், வாழ்வும் உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் இருக்கிறது என்று நினைக்கிறேன். உப்பு சுவைக்கும் பாதுகாப்பிற்கும் உதவுவது போல, ஒளி வெளிச்சத்திற்கும், இனம் காணவும், இருளை அழிக்கவும் உதவுவது போல மரியாயின் சேனையரின் வாழ்வும் பணியும் இருக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கடந்துவந்த பாதைகள் ஒவ்வொருவருக்கும் அனுபவமாகவும், இனி நடக்க இருக்கின்ற பாதைகள் புதிய வாழ்வுக்கும், இறை வழிநடக்க இறைவன் அருள் பாலிக்கவும், மரியாயின் பரிந்துரை கிடைக்கவும் பிரார்த்திக்கிறேன்.

*அருட்பணியாளர் ஜெயச்சந்திரன் அமதி*
அவுஸ்திரேலியா

# மண்ணின் மைந்தனின் ஆசி

மரியாயின் சேனை ஆரம்பித்து 50வது ஜுபிலி விழாவை நினைவுகூரும் உரும்பிராய் சருவேசுரனுடைய பரிசுத்த மாதா பிரசீடிய அங்கத்தவர்களுக்கு எனது மனப்பூர்வமான ஜுபிலி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரியாயின் சேனை என்னும் பக்தி சபையானது ஒரு பங்கின் மிகவும் முக்கியமான சக்தியாகும். ஒரு பங்கின் வளர்ச்சிப் படியின் எடுத்துக்காட்டாக இருக்கிறது. நோயாளரைச் சந்தித்தல், வீடு தரிசித்தல், மறை அறிவை ஊட்டுதல், பொதுச் சேவைகளில் ஈடுபடல், அருட்சாதனங்களுக்காக ஆயத்தப்படுத்துதல் போன்ற பணிகளை இவர்கள் செய்கிறார்கள். இது பங்குத் தந்தைக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பது உண்மை.

நாம் எல்லோரும் இயேசுவின் மறை உடலாக இருக்கிறோம். ஒன்று சேர்ந்து மரியாயின் சேனையினராக செயற்படும்போது பல பணிகளைச் செய்யமுடியும். ஜுபிலி விழாவை கொண்டாடும் உங்கள் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

மரியே வாழ்க! பணி தொடர்க.

நன்றி

*அருட்பணியாளர் ம. டேவிற்*
அமெரிக்கா.

# அயல் மண்ணின் மைந்தனின் ஆசி

உரும்பிராய் சருவேசுரனுடைய பரிசுத்த மாதா பிரசீடியம் தனது 50வது அகவையில் கால் பதித்ததையிட்டு மன மகிழ்ச்சியடைகின்றேன். இந்த சேனையினர் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

எனது அயல் ஆலய திருச்சபையின் மரியாயின் சேனையின் பொன்விழாவையிட்டு பெருமை அடைகின்றேன். ஆரம்ப காலத்தில் எமது ஆலய செயற்பாட்டில் இவர்களும் பங்கு கொண்டார்கள். எமது ஆலய மரியாயின் சேனையினரை ஊக்குவிப்பதிலேயும், அவர்களின் செயல்பாடுகளை செய்யும்படி தட்டிக் கொடுப்பதிலேயும் பெரும் பங்காற்றியுள்ளார்கள்.

இவர்களின் பணி தொடரவேண்டுமென்று மரியாளின் புகழ் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன்.

பொன்விழா காணும் ஒவ்வொரு அங்கத்தவரையும் வாழ்த்தி இறை ஆசீரையும் கேட்டு நிற்கின்றேன்.

*அருட்பணியாளர் யோசவ் பிரான்சிஸ்*
பங்குத்தந்தை, சாவகச்சேரி.

# அயல் மண்ணின் மைந்தனின் ஆசி

"ஆண்டவரை எனதுள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது."



இறை பணியில் இணைந்து 50 ஆண்டுகள் நிறைவில் பொன்விழாக் காணும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய சருவேசுரனுடைய அர்ச். மாதா மரியாயின் சேனையினருக்கு எனது மனம் நிறைந்த பொன்விழா வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் உங்கள் பணி சிறக்க இறைவனை வேண்டுகின்றேன்.

உரும்பிராய் பங்கிலே மரியாயின் சேனை ஆரம்பித்து இப்போது பொன்விழாவில் மகிழ்ந்து நிற்கும் உங்கள் மகிழ்ச்சியில் இரண்டறக் கலப்பதில் பங்கின் மைந்தன் எனும் ரீதியில் நானும் பெருமைப்படுகின்றேன். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எமது பங்கிலே விதைத்த விசுவாச விதைகளை வளர்த்து எடுப்பதில் நீங்கள் அயராது உழைத்து பணிபுரிகின்றீர்கள் என்பதை மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. குறிப்பாக எனது ஆலயமாகிய புன்னாலைக்கட்டுவன் தூய இராயப்பர் ஆலய திருச்சபையின் புதிதாக வெற்றிமாதா மரியாயின் சேனை ஆரம்பிப்பதற்கு உங்கள் முன்மாதிரியான இறை பணியும் வழிகாட்டலுமே காரணமாகும். உங்கள் அர்ப்பணிப்பு மிகுந்த செயற்பாடுகளைப் பின்பற்றி இவர்களும் வழிநடப்பார்கள் என நம்புகின்றேன். கடந்த காலங்களில் எமது நாட்டில் ஏற்பட்ட தாக்கங்களால் இடப்பெயர்வுகள், பொருளாதாரச் சுமை, குடும்பச் சுமைகள் மத்தியிலும் நீங்கள் சலிக்காது பயணித்துள்ளீர்கள். எமது பங்கில் பணியாற்றிய பங்குத்தந்தையர்களுடன் கைகோர்த்து அவர்களின் பணியை செவ்வனே செய்வதற்கு உதவி புரிந்துள்ளீர்கள். சிறப்பாக தற்போது எமது பங்கினை நல்வழிப்படுத்தும் எமது பங்குத் தந்தையையும் நன்றியோடு நினைவுகூர்ந்து பொன்விழா வாழ்த்துக்களையும் இறையாசீரையும் தெரிவிக்கின்றேன். மேலும் அன்னையின் சக்தியை, பக்தியை எவராலும் அழித்துவிட முடியாது என்பதற்கு நீங்களே சாட்சிகளாக இருக்கின்றீர்கள்.

"இதோ உன்னுடைய தாய்" என்று எம் எல்லோருக்கும் தாயாக தந்த இறைவன் தன்னுடைய மீட்புப் பணியில் கைகோர்க்கும் அன்னை மரியாளோடும் சேர்ந்து பணியாற்ற உங்களை அழைத்துள்ளார். தாயின் கருவிலிருந்தே எம்மை பெயர் சொல்லி அழைத்த இறைவனுக்காக நாம் பணிபுரியும் போது அவர் எம்மை கைவிடமாட்டார் எல்லா விதமான தீமைகளிலிருந்தும் அவர் எம்மைப் பாதுகாப்பார் "நான் ஆண்டவரின் அடிமை உமது வார்த்தையின் படியே எனக்கு நிகழட்டும்" என்று இறைவனுக்கு அடிபணிந்த மரியாளைப் போல நீங்களும் இறை சித்தத்திற்கு அடிபணியுங்கள். முட்களும் கற்களும் நிறைந்த வாழ்க்கைப் பயணத்திலும் உங்களை இறைவன் நிச்சயம் தாங்கிச் செல்வார்.

உதவி தேவைப்பட்ட எலிசபெத்தம்மாளுக்கு ஓடிச்சென்று உதவிசெய்த அன்னை மரியாளைப் போல எமது பங்கில் ஆன்ம உதவி தேவைப்படுகின்றவர்களுக்கு விரைந்து உதவி செய்யுங்கள். "அருள் நிறைந்தவளே வாழ்க" என்று மரியன்னையினை வாழ்த்திய கபிரியேல் தூதரைப் போல அன்னையின் புகழை மேலும் பெருமைப்படுத்துங்கள். உலகெல்லாம் பரந்து விரிந்து வாழும் அன்னையின் படையணியில் இணைந்திருக்கும் நீங்கள் சிறந்த ஆயுதமாம் செபமாலையினை கரங்களில் தாங்கி உலகின் தீமைக்கு எதிராக தினமும் போராடுங்கள். எப்போதும் இறைவனின் நிறைவான ஆசியும் அன்னை மரியாளின் பாதுகாப்பும் இடைவிடாத பரிந்துரையும் தொடர்ந்து கிடைக்க இறையாசீர் வேண்டுகின்றேன்.

*அருட்பணியாளர் மை. நிக்சன் கொலின்*
மேய்ப்புப்பணி நிலையம், கிளிநொச்சி.

# எம் பங்கின் மரியாயின் சேனையின் ஸ்தாபகரின் ஆசிச்செய்தி



சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே என்ற பெயர் கொண்ட மரியாயின் சேனையை 1964ம் ஆண்டு உருவாக்கினேன். இதை எண்ணுகின்ற போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. இப்பகுதி மக்கள் மிகவும் வறுமையாய் இருந்தார்கள். நாளாந்த கூலிவேலைக்குப்போய் தங்களின் பசியை ஆற்றுவார்கள். குத்தகைக்கு காணிகளை எடுத்து மிகவும் கஸ்டப்பட்டு தோட்டம் செய்து வருமானத்தைத் தேடிக்கொள்வார்கள். இவர்களுடைய பொருளாதார நிலை அந்த நேரத்தில் மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் இவர்களுடைய ஆன்மீக வாழ்வு மிகவும் போற்றுதற்குரியதாக இருந்தது. ஆலய வழிபாடுகளில் மிகவும் ஆர்வமாக கலந்து கொள்வார்கள். ஆலய வேலைகளில் எல்லோரும் ஒருமையாக சிரமதானப் பணிகளை மேற்கொள்வார்கள். ஆலயம் தங்களின் இருதயம் என்று எண்ணி ஆலய செயற்பாடுகளில் வேறுபாடு, பிரிவினையின்றி செயற்படுவார்கள். இன்னும் திருப்பலி, வழிபாடுகள் இடம்பெறும் போதெல்லாம் ஒழுங்காக எல்லோரும் சமூகம் கொடுப்பார்கள். ஆன்மீக புதுப்பித்தல், வழிபாடுகளை அர்த்தமுள்ள முறையில் ஒழுங்குபடுத்ததல், என்னும் மையப்பொருளால் மக்களை இறைவனை நோக்கிச் செல்லவேண்டும் என்று நினைத்து பல கருத்தரங்குகள் நடாத்தினேன். மக்கள் இதற்கு மிகவும் ஆதரவும், ஒத்துழைப்பும் கொடுத்தார்கள்.

ஆலயத்தைச் சுற்றி வேலிபோட்டு ஆலய வளவைச் சிறப்பானதாக்கினேன். பங்குப் பணிமனை ஒரு சிறியதாக இருந்தாலும் எனது குருத்துவத்தின் இளமைக்காலத்தை இங்கே மக்களோடு மக்களாகச் செய்தேன். இதை எண்ணுகின்ற போது இப்போதும் அந்த நினைவுகள் பசுமையாவே இருக்கின்றன.

மக்களின் ஆர்வமும், ஒத்துழைப்பும் என்னைத் தூண்டி எழுப்பியது. பல்வேறு பிரிவில் உள்ளவர்களுக்கு மரியாயின் சேனையில் சேர்ந்து பணிசெய்யவேண்டும் என்ற ஆசை என்னைத் தூண்டி எழுப்பியது. முதலிலே பெண்களுக்கான பிரசீடியத்தையம், பின்னர் ஆண்களுக்கான பிரசீடியத்தையும் இதன் வழிகாட்டலில் சிறுவர்களுக்கான பிரசீடியத்தையும் குறுகிய காலத்தில் உருவாக்கி வழிநடத்தினேன். இது மிகவும் மகிழ்ச்சியை எனக்கு ஏற்படுத்தியது. இவர்களின் தியாகம் நிறைந்த செயற்பாடுகள் இம் மரியாயின்சேனையை இன்னும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றதை அவதானித்தேன்.

இன்று இம்மரியாயின்சேனை தனது பொன் விழாவைக் கொண்டாடுகிறது என்றால் அது இறைவனின் வல்ல செயல். மரியாளின் தொடர்ச்சியான பரிந்துரை என்றே சொல்வேன். ஐம்பது வருடங்களைக் கடந்து வந்திருக்கும் நீங்கள் இன்று இறைவனுக்கு நன்றி கூறுகின்றீர்கள். மரியாளின் புகழை பறைசாற்றிக்கொண்டிருக்கின்றீர்கள். எனவே தொடர்ந்து உங்களின் பணியும், சேனையும் தொடரவேண்டும். இன்னும் மரியாயின் சேனையினரும் பிரசீடியங்களும் அதிகரிக்க வேண்டும்.

என்னுடைய ஆதரவும் உதவியும் என்றும் உங்களுக்கு இருக்கும். புதிய ஆலய கட்டுவேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. இதைப்பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் இப்போது எவ்வளவு வளர்ச்சி அடைந்துள்ளீர்கள் என்று எண்ணும்போது சந்தோசமாக இருக்கின்றது. பொன்விழா ஜுபிலியைக் காணும் மரியாயின்சேனையினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். "மரியே வாழ்க."

***அருட்பணியாளர் பெனற் கொன்சன்ரைன்***
(முன்னாள் பங்குத்தந்தை) அமெரிக்கா

# முன்னாள் பங்குத்தந்தையின் ஆசி

உரும்பிராய் பங்கில் மரியாயின்சேனை தொடங்கி 50 வருட நிறைவில் பங்கு மகிழ்வுகொள்ளும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்கள். ஒரு பங்குத்தள இயந்திரத்தை தொடர்ச்சியாக இயக்குவதற்கு மரியாயின் சேனையின் வகிபாகும் மிகமுக்கியமானதும் பாராட்டுவதற்கு தகுதியும் பெறுகிறது.

அதன் அமைப்புமுறை தேவையற்ற தலையீடுகளற்ற ஒரு நிறைவான பக்திச்சபை. அதே பாணியில் உரும்பிராய் மரியாயின் சேனை தனது பணியை தொடர்ச்சியாக முழு வீச்சுடன் இலைமறைகாயாக பங்கின் வளர்ச்சிக்கு 50 வருடங்கள் உயிர்கொடுத்து வருவதையிட்டு நிறைவுகொள்கிறோம். தொடர்ச்சியான கூட்டஅமர்வுகள், கருணைப் பணிகள், வீடு தரிசிப்புக்கள் போன்றவைகள் மூலமாக பங்கை வளர்த்தெடுத்த பொறுப்பு இவர்களையும் சாரும்.

பணியில் மூலவிசையாக இருப்பது மரியாளின் முன் உதாரண வாழ்வு, அவளுடைய இறை நம்பிக்கை, இறைவனுடைய திட்டத்திற்கு இசைவாக்கிக்கொள்ளல், வறியவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள்மேல் பற்றுப் போன்றவைகள் எப்பொழுதும் மரியாயின் சேனையாளர்களை உந்துசக்தியாக இருந்து செயல்படுத்துகிறது.

காலத்திற்கேற்ற பணிகளை இனங்கண்டு தொடர்ந்து முழுவீச்சுடன் செயல்பட இறையாசியுடன் நல்வாழ்த்துகள்.

*அருட்பணியாளர் அ. பி. ஜெயசேகரம்*
இயக்குனர்
நெய்தலம்
யாழ்ப்பாணம்.

# முன்னாள் பங்குத்தந்தையின் ஆசி



மரியாயின் சேனையினர் - இயேசுவின் சாட்சிகள்

“அவர் (இயேசு மரியாளின் மகன்) உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” (யோவான் 2:5) என்பது மரியாளின் வார்த்தையும், அழைப்புமாகும். எப்போதெல்லாம் நாம் யேசுவின் வார்த்தைக்கு எம் வாழ்வில் செயல்வடிவம் கொடுக்கின்றோமோ, அப்போதெல்லாம் நாம் மரியாளின் பிள்ளைகள். மரியாளின் சேனையினர் இயேசுவை சுவைத்து அவரை அறிவிக்கும் போதெல்லாம் நாம் மரியாளின் அன்பு அரவணைப்பில் வாழ்கின்றோம்.

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் அருட்பணி பெனற் கொன்சன்ரைன் அடிகளாரால் சிறு வித்தாக உரும்பிராய் ஆலய திருச்சபையில் விதைக்கப்பட்ட வித்தானது காலங்களூடே பல தேவைகளில் தன்னை உடைத்து அத்தேவைகளில் ஆழ வேர் ஊன்றி இன்று பெரும் விருட்சமாக வளர்ந்து கிளை பரப்பி ‘பொன்விழா’ மகிழ்வில் அகமகிழ்கின்றது என்றால் அது இவ் ஆலயத் திருச்சபையின் தாய்மைக்கு கிடைத்த பெரும் வெற்றி என்றுதான் கூறவேண்டும். ‘சருவேசுரனுடைய பரிசுத்த மாதா பிரசீடிய’ தாய்மாரை நான் இன்றும்கூட நன்கு அறிவேன். இவர்கள் அன்பும், பண்பும், பற்றும், பாசமும் உடையவர்கள். கள்ளம், கபடம், சூதுவாது தெரியாதவர்கள், நல்லவர்கள், தங்கள் மத்தியில் பணியாற்றிய அருட்பணியாளர்களை இன்றுவரை மதித்து அவர்களின் குறைநிறைகளுடன் நேசித்து மேன்மேலும் அன்பை வளர்ப்பவர்கள். தம்மால் இயன்ற தியாகப் பணிகளை ஆலய திருச்சபையிலும், பங்குத் திருச்சபையிலும் நன்றாக செய்பவர்கள். பங்குத் தந்தையின் வலது கரத்தினர். தாய்மைக்கும் அன்புக்கும் இலக்கணமானவர்கள்.

மதங்களும், மதக்கோட்பாடுகளும் பெரும் கேள்விக் குறியாகிவிட்ட இந்நாட்களில், மாறிச் செல்லும் இன்றைய நவநாகரீக உலக போக்குகளால் கவரப்படும் சிறார்கள், இளையோர்கள் யாவருக்கும் இத்தாய்மார் தொடர்ந்தும் தமது, செப தபத்தாலும், தியாக வாழ்வாலும் நல்வழிகாட்டும் தாரகைகளாக மாறவேண்டும் என விரும்பி உள்ளத்தின் ஆழத்திலிருந்து இன்றைய நாளில் பொன்விழா வாழ்த்துக்கள் கூறி விடை பெறுகின்றேன். இறைவன் உங்களை மரியாள் வழியாக ஆசீர்வதிப்பாராக.

*அருட்பணியாளர் ஜே. பி. அன்ரனிதாஸ்*
யாழ் மறை மாவட்ட நிதி முகாமையாளர்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.

# முன்னாள் பங்குத்தந்தையின் ஆசி

உரும்பிராய் மரியாயின் சேனையினர் என்னுடைய காலப்பகுதியில் மிகவும் சிறப்பாகவும் ஆர்வமாகவும் இயங்கியதை நான் அவதானித்தேன். கூட்டங்கள் இடம்பெறும்போது நான் பலமுறைகள் ஞானத் தந்தையாக செயற்பட்டிருக்கின்றேன். பலபல அறிவுரைகளும் கூறியிருக்கின்றேன். மிகவும் உற்சாகமாகவும் மிகவும் கட்டுக்கோப்போடும் இயங்கினார்கள். சிறிய சிறிய பணிகளைச் செய்து மரியாளுக்குப் புகழ் சேர்த்துக் கொடுத்தார்கள். நோயாளரைச் சந்திப்பதிலேயும் வீடு தரிசிப்புச் செய்வதிலேயும் வேறு சமயத்திலிருந்து திருமணத்திற்காக வருவோரை ஆயத்தம் செய்வதிலேயும் சிறுவர்களை வழிபாடுகளில் ஆர்வமாக பங்குபற்ற ஊக்குவிப்பதிலேயும் மிகவும் சிறப்பான பணிகளைச் செய்து வந்தார்கள்.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலேயும் ஆலய உள் வெளி துப்பரவு செய்வதிலேயும் மிகவும் ஆர்வம் மிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். திருப்பலிக்கு ஆர்வம் காட்டாதவர்களை அணுகி திருப்பலியின் முக்கியத்துவம் பற்றி அறிவுரை கூறினார்கள். அவர்களைத் திருப்பலிக்கு வரச்செய்து ஒப்புரவு அருட்சாதனத்தையும் பெற்றுக் கொள்வதற்குச் சிறப்பான பணி புரிந்தார்கள். ஆகவே கடந்த 50 வருடங்களாகச் செய்த பணிகள் அளப்பரியது. மரியாயின் சேனையினர் மரியாளின் வீரர்களாக உலகத்தின் தீமைகளை எதிர்த்து போராடுகின்றவர்களாக இருக்க வேண்டும்.

மரியாளின் தாழ்ச்சி, பணிவு, பொறுமை மற்றவர்களின் தேவைகளை உணரும், மனநிலை, அன்பு மற்றும் மன்னிக்கும் மனப்பான்மை போன்ற அணிகலன்களைத் தங்களின் ஆயுதமாகக் கொண்டு இறை வார்த்தையை போர் வாளாகக் கொண்டு சிறப்பான போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

50 வருடங்களின் நிறைவு மிகவும் மகிழ்ச்சி. எல்லோருக்கும் எனது ஜூபிலி வாழ்த்துக்கள். இன்னும் பல ஆண்டுகள் பணிசெய்யவும் இன்னும் பலர் சேனையில் சேர்ந்து கைகோர்த்து சேனையினைப் பலப்படுத்தவும் வேண்டி ஆசிக்கின்றேன்.

"மரியாயே வாழ்க"

*அருட்பணியாளர் நேசராசா*
பங்குத்தந்தை,
குருநகர்.

# முன்னாள் பங்குத்தந்தையின் ஆசி



உரும்பிராய் பங்கின் "சருவேசுரனுடைய பரிசுத்த மாதா" பிரசீடிய மரியாயின் சேனையார் தமது 50வது வருடப் பொன்விழாவைக் கொண்டாடுவதையிட்டு மனமகிழ்வடைகின்றேன்.

அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில், உலக மகா கைத்தொழிற்புரட்சியின் விளைவுகள் காரணமாக இடம்பெற்ற சீரழிவுகளைக் கண்ணுற்ற ஓர் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி பிராங்ளின் டஃப் என்பவர், திருச்சபையின் பொதுநிலையிராகவே இருந்து கொண்டு, மக்கள் மத்தியில் கிறிஸ்தவ வாழ்வை மீண்டும் மலர்விக்க, செபத்தையும் சேவையையும் கொண்ட ஓர் இராணுவ அணி போன்ற அமைப்பில் மரியாவின் அணைப்பின் கீழ் ஒரு சிறிய குழுவாக சேனையை ஆரம்பித்தார்.

இலங்கையில் முதல் முதலாக யாழ்ப்பாணம் பாண்டியந்தாழ்வில் ஆரம்பிக்கப்பட்ட இம்மரியாயின் சேனையானது உரும்பிராய்ப் பங்கில் ஆரம்பிக்கப்பட்டு 50 வருடம் ஆகின்ற இந்த நிகழ்வானது உரும்பிராய் மக்களின் விசுவாச வாழ்வின் ஆழத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

2001 முதல் 2004 வரை இப்பங்கில் நான் சேவையாற்றிய வேளை சேனையாரின் சேவையின் இன்றியமையாத தன்மை பற்றி உணர்ந்தேன். மேலும் மேலும் இதன் சேவை மலர அங்கத்தவர்கள் தொகையும் வகையும் பெருக வாழ்த்தி இறைவனின் ஆசீர் வேண்டுகின்றேன்.

***அருட்பணியாளர் கு. யே. அன்ரனிபாலா***
பங்குத்தந்தை,
அச்சுவேலி.

# முன்னாள் பங்குத்தந்தையின் ஆசி

"வல்லவராம் கடவுள் உனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார்"
(லூக்கா 1:.49)



உரும்பிராய் சருவேசுரனுடைய அர்ச். மாதா என்னும் பிரசீடியத்தின் பொன்விழாவை நினைத்து அகமகிழ்கின்றேன். இவ்வளவு காலம் நடந்து வந்திருக்கிறார்கள் என்று எண்ணுகிற போது உண்மையாகவே மிகவும் சந்தோசமாக இருக்கிறது. இறைவனின் வல்ல செயல்கள் மரியாளின் வழியாக இடம்பெற்றுள்ளது என்பது தெளிவாகிறது. மரியாயின் சேனையினர், சிறப்பான பணிகளை உரும்பிராய் பங்கிற்கு ஆற்றியிருக்கிறார்கள் என்று பார்க்கிற போது பெருமையாக இருக்கிறது.

நான் உரும்பிராய் பங்கில் பணியாற்றும் போது மரியாயின் சேனையின் செயற்பாடுகள் மிகவும் உற்சாகமாகவும் ஊக்கமாகவும் இருந்தது. நோயாளரைச் சந்திப்பதிலும், நோயாளரை தேவநற்கருணைக்கு ஆயத்தம் செய்வதிலேயும் பொது சிரமதான சேவைகள் செய்வதிலேயும், வீடுகளில் செபமாலை சொல்லுவதிலேயும் மிகவும் ஆர்வமாகச் செயற்பட்டார்கள். கூட்டங்களைக் கிரமமாக வைப்பதிலேயும் தங்களுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்வதிலேயும் ஆர்வமாக இருந்தார்கள். குறிப்பாக பங்குத்தந்தைக்கு மிகவும் ஒத்துழைப்பாகவும், பக்க பலமாகவும் இருந்தார்கள்.

இறைவனுடைய வல்ல செயல்களை இவர்களூடாக அதிகமான மக்கள் பெற்றுக் கொண்டார்கள். இறை பிரசன்னத்தை, பாதுகாப்பைப் பெறுவதற்கு உந்துதலாக இருந்தார்கள். இவர்களின் பொன்விழா மகிழ்ச்சியில் நானும் கலந்துகொள்கிறேன். மரியாளின் பெயரால் இறை அரசு மலரவும் இறை தொண்டர்கள் பெருகவும் ஆசிக்கின்றேன்.

"மரியாளின் புகழ் ஓங்குக தாயே உம்மைப் போற்றுகின்றோம்."

*அருட்பணியாளர் செ. செபநேசரட்ணம்,*
தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
லண்டன்.

# கொழும்பு கொமிசியத்திலிருந்து வாழ்த்து



உரும்பராய் புனித மிக்கேல் ஆலயப் பங்கில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டு அது தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவினை பூர்த்தி செய்வதையிட்டு மிகப் பெரு மகிழ்ச்சியுடன் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மரியாயின் சேனை என்பது ஒரு பங்கின் படையணி. இப்படையணி உதயமாகி பொன் விழா வரை வளர்ந்திருப்பது மரியன்னையின் பரிந்து பேசுதல் தொடர்ந்து எம்முடன் எப்போதும் பிரசன்னமாயிருப்பதைக் காட்டி நிற்கின்றது. விசேடவிதமாக, சேனை ஊழியத்தின் பயனாகவே இது சாத்தியமாகும். எனவே மரியன்னையினதும் சேனையின் முன்னோடி உழைப்பாளர்களினதும் நன்மைத்தனங்களை நினைவு கூர்ந்து நன்றி கூறும் ஓர் பெருநாளாக இந்நாள் கருத்தில் கொள்ளப்படுதலே முறையானதாகும். சேனை பற்றி நன்கறிந்தவர்கள் எவரும் இதனை மறுத்துரைக்க வாய்ப்பில்லை. இப் பங்கில், நானறிந்தளவில், இச்சபையின் செயற்பாடே காலத்தாலான வளர்ச்சியில் முன்னணியில் இருப்பதாக நான் உணர்கின்றேன். இதற்குச் சான்றாக இருப்பது இப்பங்கின் சேனையாளர்களின் சேவையே. மறையறிவிலும், திருவருட்சாதன வாழ்விலும் பங்கினை வளர்த்தெடுக்க முன்னய நாட்களில் சேனைப்பணியாளர்களே முன்னின்ற உழைப்பாளிகள் என்பதற்கு, நானும் அதிலிருந்து பயனடைந்த ஒரு சாட்சியாக நிற்பதில் பெருமை கொள்கின்றேன். ஞானோபதேச வகுப்புகள், (இன்றைய மறைக்கல்வி வகுப்புகள்) வீடு தரிசிப்புகள், மறைமாவட்ட செய்திப் பத்திரிகைகளை பங்கில் விநியோகித்தல் மூலம் நற்செய்தியறிவித்தல், ஆலயத் தாபரிப்புப் பணம் சேகரித்தல், குடும்ப செபமாலையை ஊக்குவித்தல், குடும்ப உறவுகளை சீராக்க உதவுதல், வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் நோயாளர்களை சந்தித்தல் அவர்களுக்காகச் செபித்தல், நற்கருணை வழங்க குருவானவருக்கு உதவுதல், வழிபாடுகளை ஒழுங்கு செய்தல், திருப்பலிக்கு முன் செபமாலை சொல்லுதல், போன்ற சேனைப் பணிகளை எந்த ஆடம்பரங்களுமின்றி சேனை மனப்பான்மையோடு அவர்களே செய்து வந்தனர். சமூக ஆன்மிக வளர்ச்சியைக் கட்டியெழுப்பும் இத்தகைய பணிகளுக்காக, அவ்வப்போது அயராதுழைத்தவர்களும், உழைத்துக் கொண்டிருப்பவர்களும் எந்நாளிலும் பாராட்டப்பட வேண்டியவர்கள். குறிப்பாக எம்மோடு இல்லாத இறந்துபோன நம் முன்னய சேனையாளர், எம் மன்றாட்டு மாலைகளினால் அவர்கள் சமாதான இளைப்பற்றியைப் பற்றிக்கொள்ளும் பொருட்டு இறைவனிடம் எம்மால் இறைஞ்சப்பட வேண்டியவர்கள்.

அடிப்படை வாதிகளினால் ஏற்படுத்தப்படும் மரியன்னை பற்றிய பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும, மரியாளை தலைவியாக் கொண்டு, உரும்பிராய் பிரசீடியம், பொன்விழாவைப் பூரணப்படுத்தி உயர்ந்து நிற்கிறது என்றால் அதன் பெருமையையும், பாரம்பரியத்தையும் இறைவன் அங்கீகரித்துள்ளார் என்பதைத் தவிர வேறு என்ன சொல்வது. மரியன்னையின் மாதத்தில் (Month of Mary) இப் பங்கில் மரியன்னை தோன்றி, ஆலய நிலமதில் அழியாத பாதச்சுவட்டினைப் பதித்து, நற்கருணைப் பேழையை

நோக்கி நடந்து வந்து, நம் சிறுவர்களுக்குக் காட்சியளித்து மறைந்து சென்ற நிஜத்தைக்கூட 2008 மே மாதம் 17ம் நாள் தினத்தில் நமக்களித்தமை எம்மவர்க்கு மற்றுமோர் சான்றினை உறுதிபடத் தந்து நிற்கின்றது. கிறிஸ்துவின் பெயரால் சபைகள் பல, ஆங்காங்கே தோன்றி சவால் விட்டுக் கொண்டிருக்கும் வேளையிலும், எமது இப்பங்கில் எவ்வித விசுவாசக் குழப்பத்தையும் உண்டாக்காமல், மரியன்னை தம்மக்களை காத்து வருவதும், அவளின் பக்தர்கள் நாளுக்கு நாள் பெருகி வருவதும், சபையார்கள் ஊடுருவமுடியாத சபையாக உரும்பராய் திருச்சபை விசுவாசத்தின் உச்சத்தில் வளர்ந்திருப்பதும்கூட மரியன்னை எமக்களித்துள்ள மாபெரும் சான்றேயாகும். மரியன்னையின் சபையாக தனக்கேயுரிய பாங்கில் வளர்ந்து இத்தகைய பெருமைகளுடன் இப்பிரசீடியம், பொன்விழாவில் பெருமிதம் காண்பது தகுதியானதே.

1921 செப்டம்பர் 7-ம் நாள் அயர்லாந்து தேசத்தவரான பிராங்க் டஃப் என்பவரால் டப்ளின் மாநகரில் பிரான்சிஸ் வீதியில் உள்ள மீரா விடுதியில் முதன் முதலில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் முதலாவது பிரசீடியம் யாழ் மண்ணில் பண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயப் பங்கில் 1936 பெப்ரவரி மாதம் 1ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது மரியாளைப் படைத்தலைவியாக ஏற்று, சாத்தானின் சக்தியை எதிர்த்து போர் புரியும் கத்தோலிக்கர்களை அங்கத்தினராகக் கொண்ட ஓர் இல்லற இயக்கமே மரியாயின் சேனையாகும். இத்தகைய கத்தோலிக்கர்களை அங்கத்தினராகக் கொண்ட இந்த இயக்கம் உரும்பராய் புனித மிக்கேல் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவை கட்டாயமானதொன்றாக இருந்திருக்க வேண்டியதன் அவசியம் ஆலயவரலாற்றின் பின்னணியிலும் நோக்கப்படல் வேண்டும். புனித மிக்கேல் சம்மனசானவர் இப்பங்கிற்கு பாதுகாவலராக பங்கு மக்களின் வேண்டுகோளின் பெயரில் சுவாமி ஞானப்பிரகாசரால் தேர்ந்து கொள்ளப்பட்டமைக்கும், மரியாயின் சேனையின் சாத்தானை எதிர்த்துப் போரிடும் கத்தோலிக்கர்கள் என்ற அங்கத்துவ உரிமைக்கும் ஓர் தொடர்பு இருப்பதாகவே நான் காண்கின்றேன். எது எவ்வாறிருப்பினும் இப்பங்கின் மரியாயின் சேனை முன்னாள் ஊழியராயினும் சரி இன்னாள் ஊழியர்களாயினும் சரி தங்கள் அங்கத்துவத் தகுதியைத் தொடர்ந்து காத்துவருகின்றமை பாராட்டப்படல் வேண்டும். இனிவரும் காலங்களிலும் அப்பெருமை கட்டிக் காக்கப்படல் வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

தங்களது சமயக் கடமைகளை பிரமாணிக்கத்துடன் நிறைவேற்றுபவர்களும், சேனையின் அலுவல்கள் வழியான இல்லற அப்போஸ்தலத்துவத் தொண்டாற்ற ஆவல் உள்ளவர்களும், சேனை கட்டளையிடும் ஒவ்வொரு கடமைகளையும் நிறைவேற்றத் தயாராயிருப்பவர்களுமே சேனை அங்கத்துவத்திற்குத் தகுதியாயிருப்பவர்களாகின்றனர். எனினும் ஐம்பது வருடங்களைக் கடந்து நிற்கும் நாம் இளைஞர் பிரசீடியங்கள், பாலர் பிரசீடியங்கள், வளர்ந்த ஆண்கள் பிரசீடியம் என்பவற்றை ஆரம்பிக்கும் செயற்பாடுகளில் பின்தங்கி நிற்பதாகவே எண்ணத்தோன்றுகின்றது. எனினும் சேனை மனப்பான்மை எனும் மரியாயின் மனப்பான்மையும், சிறப்பாக மரியன்னையிடம் விளங்கிய ஆழ்ந்த தாழ்ச்சி, குறையற்ற கீழ்ப்படிதல்,வானவர்க்குரிய இனிமை, இடையறாத செபப்பற்று, நீடித்த ஒறுத்தல், பழுதற்ற கற்பு, வீரம்பொருந்திய பொறுமை, தன்னலம்

துறந்த தியாகம், இறையன்பு, விசுவாசம் என்பவற்றை சேனையார் கைக்கொண்டு நடப்பதில் கொண்டிருக்கும் பற்றுறுதியே மற்றவர்களையும் இப்படையில் இணைய வேண்டும் என்ற எண்ணத்தை தோற்றுவித்து அழைத்து வரும் செய்தியை துல்லியமாக வளங்கக்கூடிய சிறந்த ஒன்றாகும். இதுதான் எம்மை மேற்சொன்ன இலக்குகளை எதிர்காலத்திலாவது எமது பங்கில் எட்டக்கூடிய வாய்ப்புக்களைப் பெற்றுத்தரும். இவற்றை விரைந்தடைய மரியன்னையின் பரிந்துரையை வேண்டுவோமாக. இதனால் இன்னும் பல சேனை வீரர்கள் அதிகரித்து நாகரிகமான பக்தியும், உண்மைக்காக, நீதிக்காக, நேர்மைக்காக உழைத்த நம் இயேசுவின் இறுதிப்பயணம் வரை இறுதிமட்டும் சிலுவையடிவரை சென்ற மரியன்னையின் சுவட்டைப் பின்பற்றும் சிறந்த சேனையாளராக உருவெடுக்கும் பாங்கு வளரந்து சிறப்பான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியும் ஆசித்து, என் இனிய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மரியே வாழ்க"

**திரு. இராஜேந்திரம் தங்கராஜா**
இணைச்செயலாளர்
பரிகாரமாதா கொமிசியம்
6ம் சின்னப்பர் நடுநிலையம்
கொழும்பு.

# தலைவியின் வாழ்த்துரை



"அருள் நிறைந்த மரியே வாழ்க"

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத் திருச்சபையின் மிகவும் முக்கியமான பக்தி சபைகளில் ஒன்று மரியாயின் சேனை. இப்பக்தி சபைக்கு சருவேசுரனுடைய பரிசுத்த மாதா பிரசீடியம் என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் பங்குத் தந்தையாக இருந்த பெனற் கொண்சன்ரையின் அடிகளாரால் அத்திவாரம் இடப்பட்டு இப்போது பெரும் கட்டிடமாக உருவாகியுள்ளது. 50 ஆண்டுகளை முடித்துள்ளது என்று சொல்லும் போது மிகவும் மகிழ்ச்சியாகவும், சந்தோசமாகவும் உள்ளது. தற்போது எமது சேனையில் 20 அங்கத்தினர் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். பொன் விழா என்பது எமது வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்று நிகழ்வாகும். இந்நிகழ்வு எனது காலத்தில் இடம்பெறுவதை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். மரியாளைப் புகழ்ந்து பாடுகிறேன்.

பல்வேறு துன்பங்கள், இடம்பெயர்வுகள், போர்களின் வடுக்கள், நோய்கள் போன்றவற்றினூடாக நாம் பயணித்து வந்தோம். எமக்கு இறைவனின் அருளும் மரியன்னையின் பரிந்துரையும் நிறைவாகக் கிடைத்தது. இன்றும் மரியாயின் சேனையாக இருக்கும் நாம் மரியாளின் எண்ணங்களை, விருப்பங்களை, ஆலோசனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

சேனையரின் கைநூல் ஒழுங்குகளைச் சிறப்பான முறையில் கடைப்பிடிக்க அழைக்கப்படுகிறோம். இதில் மிகவும் தெளிவாக மரியாளின் மனநிலை, சேனையின் சேவை, சேனைக்குரிய பக்தி, மரியாளின் மட்டில் சேனையரின் கடமைகள், வழிமுறைகள், நோக்கங்கள், அப்போஸ்தலிக்க சேவைகள் போன்றவை தெளிவாக விளங்கிக் கொள்ளவும் அவற்றை முறையாகக் கடைப்பிடிக்கவும் சேனையராகிய நாம் விசேட விதமாக இவ் ஜூபிலி ஆண்டிலே அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

எங்கள் மட்டிலும் அன்புறவு, தியாக மனப்பான்மை, ஏற்றுக்கொள்ளும் தன்மை, அமைச்சல் உள்ள மனப்பான்மை, இறை பக்தி போன்றவையை நாம் ஊக்குவிக்க வேண்டும். பொன்விழா எம்மைப் புதுப்பிக்கும் விழாவாகவும், புதிய யுகத்தை உருவாக்கும் விழாவாகவும், புதிய உள்ளத்தை ஏற்படுத்தும் விழாவாகவும் இருக்க வேண்டும். மரியாளின் மனநிலை எம்மத்தியில் உருவாக வேண்டும். அதற்காக நாம் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும்.

*திருமதி திரவியநாதன் வினிபிரெட்*
தலைவி
சருவேசுரனுடைய பரிசுத்த மாதா பிரசீடியம்
புனித மிக்கேல் ஆலயம், உரும்பிராய்.

# அருட்சகோதரியின் வாழ்த்து



மாறிவரும் உலகில் மாறா விழுமியங்களான பிறரன்புப் பணிகளில் ஈடுபாடுகள் கொண்டு அவற்றைச் செம்மையுற செயற்படுத்தி செழுமையுறச் செய்வதற்கும் மனம் வேண்டும். நான், எனது, எனது குடும்பம், எனது வளர்ச்சி, எனது உயர்வு, எனது மகிழ்ச்சி என எம் அயலவரைப் பற்றிய சிந்தனை, அக்கறை எதுவுமின்றி சுயநலத்தோடு தன்னையே சுற்றிச் சுற்றி வலம் வரும் மனிதர்கள் மத்தியிலே, மரியின் ஊழியர்களாக பிறரன்புப் பணிபுரிவதில் ஆர்வமுடன் ஈடுபட்டு உழைக்கும் எம் உரும்பிராய் மண்ணின் சருவேசுரனுடைய அர்ச். மாதா பிரசீடியத்தினரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

'ஆகட்டும்' என்னும் வார்த்தையால் கடவுளின் திட்டத்திற்கும் செயலுக்கும் தன்னை முழுவதுமாய்க் கையளித்த அன்னை மரியாளின் அடிச்சுவடுகளில் நம்பிக்கையோடு பாதம் பதித்துப் பயணித்து பணிகள் பல புரிந்து இன்று தமது ஐம்பதாவது அகவையில் மகிழ்ந்திருக்கும் மரியின் ஊழியர்களை வாழ்த்தி நிற்கின்றேன்.

இந்தப் பணி வாழ்விற்கும் மகிழ்ச்சிக்கும் காரண கர்த்தாவாக இருந்தவர் எங்கள் மதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய அருட்பணி பெனட் கொன்சன்ரைன் அடிகளாவர் என்பதை நினைக்கும் பொழுது உள்ளம் பேருவகை கொள்கின்றது. 1964இல் இருந்து இன்று வரை முறிவு நெரிவு எதுவுமின்றி சலனமற்ற முறையில் சேனை பயணிப்பதன் இரகசியம் அடிகளார் இட்ட பலமான அத்திவாரமே என்றால் மிகையாகாது. தந்தை அவர்களை இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

அருள் மிகப் பெற்றவரான அன்னையின் அடிச்சுவடுகளில் உங்கள் வாழ்வானது வாழும் தலைமுறையினருக்கும் வருங்கால சந்ததியினருக்கும் முன்னுதாரணமாகத் திகழ உங்கள் பணி தொடர பிரார்த்தித்து மண்ணின் மகளாகிய நான் உளமார வாழ்த்தி நிற்கின்றேன்.

ஒருநாவு போதாதம்மா ஓராயிரம் வார்த்தைகளிலும் தீராதம்மா எங்கள் நன்றி. பணிக்கென அழைத்து துணையாக நின்று அர்ப்பணிப்புடன் செயற்பட வழிகாட்டி நின்றாய். மரியே நீ வாழ்க.!

***அருட்சகோதரி செபமலர்*** அ. கா. (மண்ணின் மகள்)
லங்காமாதா கன்னியர் மடம்
அச்சுவேலி.

# அருட்சகோதரியின் வாழ்த்து



மரியே வாழ்க
சேனையின் தலைவியாம் அன்னை மரியை போற்றுவோம்
அவர்(ள்) பணி செய்ய வந்த படையணியை வாழ்த்துவோம்
ஏழ்மை நிலை கொண்டு ஏற்றம் காணும்
சேனைச் சோதரரே செம்மலர்களே
செழிப்புடன் செய்யும் சேவைதான் எத்தனை

சென்னீர் சிந்தி சிலுவை கண்ட மகனோடு
கூடவே நடந்த தாயின் பணிதனை
தடம் பதிக்கும் தளரா மனங்கொண்ட(டு)
போர் முனையில் உறுதியுடன் உழைக்கும்
உன்னத சேனையாரை(ரே) வாழ்க!

நோயாளரைக் கண்டு செபித்தீரே
திருவருட் சாதனங்களை நிறைவேற்ற துடித்தீரே
மாற்றான் மரணத்திலும் மனதார பங்குகொண்டு
பிற பணிகளாக ஏராளம் செய்து
எல்லோரையும் மகிழவைக்கும் சேனையாரை வாழ்த்துகிறோம்

செபமாலை ஓதி இறை செய்தி படித்து
திருப்பலி காண திருத்தம் கொடுக்கும் திருத்தொண்டர்களாய்
திருநாளாம் அன்னை மரியாளின் பிறந்தநாளை
பெருநாளாய் கொண்டாடி மகிழும் சேனையாரை பாராட்டி வாழ்த்துகிறோம்

உங்கள் பணிகள் எங்களுக்குத் தேவையே
புது மலர்களாக புது மனங்களாக புத்துயிர் பெற்று
எம்பங்கு சிறக்க தொடர்ந்து அயராது
போர் வீரர்களாய் களம்பல கண்டு
கருத்தாய் உழைத்து உன்னத மகிமையாய் விளங்கிட
உளமார, மனதார பாராட்டி வாழ்த்துகிறோம்
வாழ்க வாழ்க வாழ்க.

*அருட்சகோதரி சாந்தி*
தலைவி,
“ஒக்சீலியம்”
சலேசியன் கன்னியர்சபை - உரும்பிராய்

# அருட்பணிச்சபை வாழ்த்துரை

"தாழ்நிலை நின்ற தம் அடியவரை தயையுடன் கண் நோக்கினார்"



தூய மிக்கேலின் கண்காணிப்பிலும், பாதுகாப்பிலும் வாழ்ந்து சாட்சிய வாழ்வில் நூற்றாண்டை அண்மித்திருக்கும் எம்மிடையே இறைவனை கருவில் தங்கப் பேறுபெற்ற தூய மரியன்னையின் உன்னத சீடத்துவத்தில் பங்கெடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட "மரியாயின் சேனை" அமைப்பு பொன்விழா காணுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

பல தசாப்தங்களுக்கு முன்னர் கைவிடப்பட்டு தாழ்நிலையில் நின்ற எம் ஒவ்வொருவரையும் இறைவன் தயையுடன் நோக்கி பெயர் சொல்லி அழைத்து தம் நலன்களால் தொடர்ச்சியாக நிரப்பி வருகின்றார். இவற்றிற்கெல்லாம் பிரதி அன்பு செலுத்தும் நோக்கில் அன்னை மரியாளோடு ஒன்றித்து விசுவாச வாழ்வில் தாகம் கொள்ளவும் இறை மகிமையை வெளிப்படுத்தவும், தனிப்பட்டவரின் ஆன்மிக, சமூக நலன்களில் அக்கறை செலுத்தவும் நமது மரியாயின் சேனையினர் முன்வந்து செயற்படுவது நமக்கு கிடைத்த பெருவரமாகும்.

உலகம் முழுவதும் பரந்து விரிந்து செயற்பட்டு வரும் மரியாயின் சேனை அமைப்பு நமது மண்ணில் எவ்வித இடையூறுமின்றி ஐம்பது வருடங்களாக செயற்பட்டு வருவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். கடந்து வந்த நாட்களில் சேனைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த உறுப்பினர்கள், இறந்து போனவர்கள், ஊக்குவிப்பாளர்கள் யாவரையும் இந்நேரத்தில் நினைவு கூர்ந்து நன்றி செலுத்துகின்றோம்.

தொடர்ந்து வரும் காலங்களில் மரியாயின் சேனை பற்றிய விழிப்புணர்வு அனைத்து பிரிவினரிடையேயும் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதோடு சிறுவர், இளையோர், ஆண்கள் என யாவரும் சேனையில் இணைந்து செயற்பட ஊக்கம் அளிக்கப்படவேண்டும் என்பது நமது தாழ்மையான வேண்டுகோளாகும். எனவே தாழ் நிலையில் இருந்து உயர்த்தப்பட நாம் அந்த உயர்நிலையில் நம்மை நிலைநிறுத்த தொடர்ந்தும் உழைப்போம். மரியன்னையின் சீடத்துவத்தில் நம்மை இணைத்துக்கொள்வோம்.

"அன்னை மரியே வாழ்க, அன்புத்தாயே வாழ்க"

**திரு. ஞா. வொட்கின்சன்**
செயலாளர்,
அருட்பணிச்சபை,
புனித மிக்கேல் ஆலயம்,
உரும்பிராய்.

# நற்செய்திப் பணியாளர் மன்றம்

## வாழ்த்துரை



எமது உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் 1964ம் ஆண்டு விதைக்கப்பட்ட மரியாயின் சேனை எனும் விதை வேர்விட்டு கிளை பரப்பி ஒரு விருட்சமாகி இன்று பொன்விழாவினைக் கொண்டாடி மகிழ்வதையிட்டு உளப்பூரிப்படைகின்றேன்.

மரியாயின் சேனையினரின் பணி மிகவும் செயலாற்றலானது கிறிஸ்துவுக்குப் பணிபுரிந்தவர் பலர். சில பெண்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்கு பணிவிடை செய்தனர். ஆனால் மரியாளோ தன்னை முற்றுமுழுதாக இறைவனுக்கு அர்ப்பணித்தாள். அவளின் அர்ப்பணிப்பையும், சேவையையும் ஏற்று பணிபுரியும் எமது சேனையினரை மகிழ்வோடு புகழ்கின்றேன்.

50வது ஆண்டு நிறைவில் உங்கள் வளர்ச்சி, சேவை கண்டு பெருமிதமடைகின்றேன். தளரா ஊக்கத்துடன் நீங்கள் செய்யும் சேவைகளைப் பாராட்டுவதுடன் விழாவினைச் சிறப்பிக்கும் தலைவர் மற்றும் அங்கத்தவர்களை வாழ்த்துகின்றோம்.

உங்கள் பணிக்கு பக்கபலமாய் நாங்கள் இருப்பதுடன் மரியாளின் பாதுகாப்பும், பராமரிப்பும், பரிந்துரையும் கிடைக்க செபங்களுடன் கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*செல்வன் றொபேட் றொணி*
தலைவர்,
நற்செய்திப் பணியாளர் மன்றம்
புனித மிக்கேல் ஆலயம்
உரும்பிராய்

# வாழ்த்துரை



உரும்பிராய் திருச்சபையின் மரியாயின் சேனை தனது 50வது ஆண்டு நிறைவை இன்று கொண்டாடிக்கொண்டிருக்கிறது. இவர்களின் பொன்விழாவில் இணைந்து அவர்களை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். சமூக சீர்கேடு நிறைந்த இன்றைய காலத்தில் மரியாயின் சேனையின் மகத்துவத்தை நாம் கண்கூடாக காண்கிறோம்.

இந்த சேனையில் எமது பங்கில் 20 சகோதரிகள் உள்ளனர். அவர்களின் பணிகள் சிலவற்றை உங்களுக்கு சொல்லாமல் இருக்க முடியாது. நோயாளரைத் தரிசித்து ஆறுதல் வார்த்தை சொல்லி நற்கருணை பெற அவர்களை தூண்டுகின்றனர். ஒழுங்குபடுத்தாத திருமணங்களை சீர்படுத்த உதவுகின்றனர்.

விரும்பி சமயம் மாறுவோரை அணுகி அவர்களின் கவர்ச்சியில் ஈடுபடுவோரைச் சந்தித்து அவர்களுக்காக செபித்து அவர்களை மரியன்னைபால் திருப்ப வழிசமைத்து வருகிறார்கள். இவர்களின் சேவையில் பெரும் சேவையாகிய செபமாலை சொல்லுவதை நாம் நேரில் கண்டு வருகிறோம். மரியாயின் சேனை மாதா கூட்டத்துடன் இணைந்து செபமாலை சொல்லுவதை காண்கின்றோம். திருப்பலியில் சிறுவர்களை கவனித்தல் என்பது மிகவும் சிரமமான வேலையாகும் ஆனால் அவர்கள் அதைச்செய்ய முன்வருகிறார்கள். தங்கள் பணத்தையோ, நேரத்தையோ பொருட்படுத்தாமல் வைத்தியசாலைக்கு சென்று நோயாளருக்கு ஆறுதல் வார்த்தை கூறி அவர்களோடு பழகுவதால் அவர்களின் நோய்த்தாக்கம் குறைந்து விடுகிறதென்பதை நோயாளரே சொல்கிறார்கள். கிழமை தவறாது ஆலய வளவைத் துப்புரவு செய்து வருவதை பாராட்டாமல் இருக்க முடியாது.

என்னும் உறுதியும் ஆர்வமும் உள்ள பொதுநிலையினரின் செப உதவி ஒவ்வொரு பங்கிலும் இருக்க வேண்டும். கடின உழைப்பிற்கும் வன்சொற்களுக்கும் அஞ்சாது பணிபுரியும் உரும்பிராய் மரியாயின் சேனையினரை மீண்டும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

*திரு. ஞானப்பிரகாசம் திருச்செல்வம்*
தலைவர்
புனித சூசையப்பர் மன்றம்
உரும்பிராய்

# வாழ்த்துச் செய்தி



பொன்விழா காணும் எமது மரியாயின் சேனையினரை வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன். கடந்த 50 ஆண்டுகளாக தமது பணிகளை தொடர்ந்தாற்றும் இவர்களை வாழ்த்துவதில் உரும்பிராய் பங்கைச் சேர்ந்தவள் என்ற வகையில் பெரும் மகிழ்வடைகிறேன்.

அருட்திரு பெனற் கொன்சன்ரைன் அடிகள் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மரியாயின் சேனை பழைய, புதிய அங்கத்தவர்களை இணைத்து தற்போது 20 அதிக உறுப்பினர்களை கொண்டு செயற்படுகின்றது. எமது மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசெப் ஆண்டகை 1972ம் ஆண்டு எமது பங்கில் கடமை ஆற்றும் போது நான் மரியாயின் சேனையில் இணைந்து சேவையாற்றினேன். இன்று எமது பங்குத்தந்தை அருட்திரு யூட்நிக்ஷன் அடிகளாரின் கடுமையான முயற்சியால் பல புதிய அங்கத்தவர்களை இணைந்துள்ளார்கள்.

புதிய உறுப்பினர்கள் மரியாயின் சேனையில் இணைந்து சேவை புரிவதில் மிகவும் உறுதியாயும் ஆவலாகவும் இருப்பதைப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. மரியாவின் பணியை ஏற்பது மிகவும் கடினமானதொன்றாகும். அவளின் ஏழ்மை, பணிவு, தாழ்ச்சி போன்ற புண்ணியங்களைக் கடினமாக கடைப்பிடிக்க வேண்டும். சீனா அதிகாரி ஒருவர் கூறினார் 'நான் உலக ஆயுதங்களுக்கும் அணு ஆயுதங்களுக்கும் வேறு எந்த போர்களுக்கும் வேறு எதற்கும் பயப்பிடவில்லை. எனக்கு ஒரே ஒரு ஆயுதத்திற்கே பயம் அது மரியாயின் சேனை' என்று மிகவும் உயர்வோடு கூறினார். ஏனெனில் மரியாவின் உயர்ந்த பண்பு, ஒழுக்கம் சட்டதிட்டங்கள் மிகவும் பலமானவை, கடுமையானவை. மரியாயின் சேனையின் பிரதான பண்பு, இரகசியம் காத்தல். இது மரியாவின் தாழ்ச்சி அமைதியை எடுத்துக்காட்டுகின்றது.

எமது மரியாயின் சேனையினரும் தமது கடமைகளை சேவைகளை சிறப்பாக ஆற்றி வருகிறார்கள். நோயாளரை தரிசித்தல், ஒழுங்குபடுத்தாத திருமணங்களை முறைப்படுத்தல், வைத்தியசாலை தரிசிப்பு என்பவற்றை முழுமையாக நிறை வேற்றுகின்றார்கள். அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன். ஒவ்வொரு அங்கத்தவர்களும் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழவும் இன்னும் புதிய அங்கத்தவர்களை இணைத்து பெரும் பலத்துடன் செயற்பட வாழ்த்துகின்றேன்.

***திருமதி பத்திநாதன் தவமலர்***
உப தலைவர்
மாதா கூட்டம் - உரும்பிராய்

# அதிபரின் வாழ்த்துச் செய்தி



"அருள் மிகப் பெற்றவளே வாழ்க"

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய மரியாயின் சேனை பக்திசபை 50 வருடங்கள் நிறைவை எட்டியிருப்பதையிட்டு பெருமகிழ்வு அடைகிறேன். எமது திருச்சபை சூழமைவில் பல்வேறுபட்ட பக்திச் சபைகள் காணப்பட்ட போதிலும் "மரியாயின் சேனை" தொன்மையானதும் அதே உயிர்ப்பான சபையாகவும் இருந்து வருகிறது. மரியாளின் வழியாக பல்வேறுபட்ட ஆன்மீக விடயங்களையும் சமூக சார் வேலைகளையும் இச்சபை செய்து வருகிறது. மரியாள் மேல் கொண்ட அளவிட முடியாத பக்தியின் தூண்டுதல் தான் இச்சபையின் செயற்பாடுகளாக அமைவதைக் காண முடியும்.

புனித மிக்கேல் ஆலய மரியாயின் சேனை சபையின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியது. போற்றுதற்குரியது. இறை விசுவாசத்தைக் கட்டியெழுப்பக்கூடியது.

பொதுவாக இத்தகைய சபைகள் தனித்து செபித்தல் வழிபாடுகளை மேற்கொள்ளல், ஆலயம்சார் பணிகளை மேற்கொள்ளல் போன்ற ஆன்மீக கருமங்களில் மட்டுமே ஈடுபடுவது வழக்கம். ஆனால் இவ் ஆலயத்தின் "மரியாளின் சேனை" சபையினர் பல்வேறுவிதமான சமூகச் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டுவதைக் காணக்கூடியதாக உள்ளது. காலத்தின் தேவை கருதி இவர்கள் மேற்கொள்ளும் சமூகம் சார் ஆன்மீகப் பணிகள் பெறுமதியானவை. குடும்ப ஒற்றுமை நோயாளிகள் தரிசிப்பு, துயருற்றோருக்கான ஆறுதல், திருமண ஆயத்த ஒழுங்குகளை மேற்கொள்ளல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

தங்கள் வேலைப்பழு, குடும்பச் சுமை, குடும்பப் பொறுப்புகள் போன்றவற்றையும் சுமந்து இத்தகைய பொது விடயங்களிலும் பெண்கள் குறிப்பாக அன்னையர் ஈடுபடுவது என்பது சவால் நிறைந்தது.

தூய மிக்கேல் ஆலய மரியாயின் சேனை இன்னும் பல விழாக்களைக் காண வேண்டும். உறுப்பினர் குடும்பங்களை இறைவன் ஆசீர்வதிக்க வேண்டும் என வேண்டுகிறேன்.

"அன்னை மரியே வாழ்க"

*திரு. ஞா. கெனத் மேரியன்*
அதிபர்,
உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலை.

# சென். மைக்கல் சனசமூக நிலையத்தின் வாழ்த்துச் செய்தி



எமது உரும்பிராய் புனித மிக்கேல் பங்கில் மிகவும் ஆரோக்கியமாக செயற்பட்டுவரும் மரியாயின் சேனை ஆரம்பிக்கப் பட்டு இன்று பொன்விழா காண்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அன்னை மரியாளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அதற்கு அமைய தமது உளமார்ந்த அளப்பரிய சேவைகளைப் பொன் எழுத்துக்களால் பொறிக்கும் வகையில் அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

எமது பங்குத் திருச்சபையின் நேர்த்தியான வழிகாட்டலால் சேனையினர் முன்னெடுத்துச் செல்லும் பணி மிகவும் சிறப்பானது. இக்காலகட்டத்தில் இவர்களுடைய பணி மிகவும் அவசியமானது. குறிப்பாக ஆற்றுப்படுத்தல், செபமாலை சொல்லுதல், நோயாளர்களைத் தரிசித்தல், குடும்ப பிணக்குகளைத் தீர்த்து வைத்தல், சிரமதான பணிகளை முன்னெடுத்தல், தேவை உள்ளோருக்கு தேடிச்சென்று உள அன்போடு உதவி புரிதல் போன்றவை குறிப்பிடத்தக்கது.

மரியாளுக்கு தம்மை அர்ப்பணித்து அன்னையின் அரவணைப்புடனும் ஆசீர்வாதத்துடனும் சேவைதனில் பொன்விழா கண்டுநிற்கும் மரியாயின் சேனையினரை வாழ்த்தி நிற்பதோடு இன்னும் பல ஆண்டு விழாக்களைக் கடந்து இவர்களுடைய சேவைகள் தொடர வேண்டுமென்று ஆசி கூறி நிற்கின்றோம்.

***செல்வன் த. றொனால்ட்நீகன்***
தலைவர்,
சென் மைக்கல் சனசமூக நிலையம்,
உரும்பிராய்.

# புதுமை மாதா பிரசீடியத் தலைவியின் வாழ்த்துச் செய்தி

"பெண்களுக்குள் ஆசீர்பெற்றவள் நீர்"



மனித மாண்பை வளர்த்தெடுக்கும் தொனிப்பொருளுடன் முன்னோக்கி நகர்ந்து வரும் யாழ். மறை மாவட்ட திருச்சபையின் ஓர் அங்கமான மரியாயின் சேனை வெற்றி விழாக்களைக் கொண்டாடி வருவது மகிழ்ச்சிக்குரியதே!

குடும்ப வாழ்வைச் சீர்குலைத்துவிடக்கூடிய மனித மாண்பை கழுவேற்றக்கூடிய ஏதுக்கள் நிறைந்த இக்காலகட்டத்தில் புனிதர்களின் சமூக உறவும், திருக்குடும்பத்தின் முன்மாதிரிகையும் மிக மிக அவசியமாகும்.

அன்னை மரியாள் இறைவனின் மீட்புத் திட்டத்தின் அத்திவாரமாக விளங்குகிறாள். ஆதித் திருச்சபையைக் கட்டமைத்துக் கொள்வதிலும் தொடர்ந்து வழிநடத்தி வருவதிலும் அன்னை எம்மீது கொண்ட அன்பானது கடவுளின் இரக்கத்தைக் காட்டுகிறது.

மரியாயின் சேனையூடாக அன்னை மரியாள் எமக்கு அளித்து வரும் அனைத்து நன்மைத்தனங்களுக்கும், பரிந்துரைகளுக்கும் நன்றி கூறுவது எமது கடமையாகும். உரும்பிராய் பங்குத் திருச்சபையின் மரியாயின் சேனை பொன்விழா காண்பதையிட்டும் விழா மலர் வெளிவருவதையிட்டும் பேருவகை கொண்டு வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றேன்.

*திருமதி அருளம்மா இராசநாயகம்*
புதுமை மாதா பிரசீடியம்
புனித ஹென்றி அரசர் ஆலயம்
யூலனூர்

# நீர்வேலி பரலோக அன்னையின் பிரசீடியத்தினரின் வாழ்த்துச் செய்தி



இறைவனின் திருவுளத்தைப் பணிவுடன் ஏற்றுப் பணிபுரிய அழைக்கப்பெற்ற உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தின் மரியாயின் சேனையினரின் "சருவேசுரனுடைய அர்ச். மாதா" பிரசீடியத்தின் பொன்விழாவிற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

மரியாள் தனது வாழ்வில் கடைப்பிடித்த பண்புகள் மேலானது. "தாழ்நிலை நின்ற அடிமை (லூக் - 1:48) எனத் "தன்னைத் தாழ்த்தி முழு மனித சமுதாயத்திற்கும் விடுதலையைப் பெற்றுக் கொடுக்க எமக்காக இறைவனிடம் பரிந்து பேசுபவள்" இவ்வாறான தூய அன்னையின் வழியை முன்மாதிகையாகக் கொண்டு செயற்படும் மரியாயின் சேனையினராகிய இவர்களது செப வாழ்வு, பிறரன்புப் பணிகள் பிறநலம் நாடல் போன்றவற்றால் சந்தித்த சவால்களை எல்லாம் வெற்றியின் படிக் கற்களாக மாற்றி வெற்றிநடைபோடும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தின் மரியாயின் சேனையினரின் பொன்விழா சிறப்புற எல்லாம் நிறைந்த தூய பரலோக அன்னை அருள் புரிய வேண்டி வாழ்த்துகின்றோம்.

***திருமதி பத்மாதேவி பிறின்ஸ் செல்வக்குமார்***
தலைவி
"சமாதானத்தின் இராக்கினி" பிரசீடியம்
பரலோக மாதா ஆலயம்
நீர்வேலி



புதிய உறுப்பினர்களுடன்



நோயாளரின் வீட்டில் செபித்தல்



வீட்டில் செபமாலை சொல்லுதல்



முன்னாள் பங்குத்தந்தையுடன் ஆயரில்லத்தில்

# மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்

"ஆண்டவருக்கு நன்றி சொல்லுங்கள்
ஏனெனில் அவர் நல்லவர்"



உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பங்குத் திருச்சபையில் சருவேசுரனுடைய அர்ச். மாதா என்னும் பெயரில் சிறப்பாக பணியாற்றி ஐம்பது வருடங்களைப் பூர்த்திசெய்து மனம் மகிழ்ந்து நிற்கும் மரியாயின் சேனையினருக்கு எமது பொன்விழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். வாழ்வுப் பயணத்தில் பல்வேறுபட்ட இன்ப துன்ப அனுபவங்களோடு உங்களை வழிநடத்தி பாதுகாத்து பராமரித்து வரும் எல்லாம்வல்ல இறைவனை நன்றியோடு நினைக்கின்றோம்.

காலத்தின் தேவை கருதி நீங்கள் ஆற்றிய இறைபணியானது வார்த்தைகளில் அளவிடமுடியாதது. குறிப்பாக போர்க்கால சூழ்நிலையில் மனம் தளராமல் பணியாற்றி பொன்விழா காண்பது மிகவும் பாராட்டுக்குரியது. ஆன்ம வழிகாட்டிகளான பங்குத் தந்தையர்களுடன் ஒத்துழைத்து அவர்களின் வழிநடத்தலில் சிறப்பாக இயங்கியதை உணரக்கூடியதாக இருக்கின்றது.

இளமைத் துடிப்புடன் பணியாற்ற முன்வந்திருக்கும் "வெற்றிமாதா" மரியாயின் சேனையினராகிய எமக்கு உங்களின் பணி புதிய உத்வேகத்தையும் பணி ஆர்வத்தையும் அளிக்கின்றது.

"இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1:48) என்று பாடிய அன்னை மரியாளை இயேசு நம் எல்லோருக்கும் தாயாகத் தந்திருக்கின்றார். அன்னை மரியாளின் புகழையும் பக்தியையும் பறைசாற்றும் உங்கள் பணி தொடர்ந்து மேலும் சிறக்கவும், பங்குத்தந்தையுடன் கைகோர்த்து பங்கின் வளர்ச்சியில் ஆர்வமுடன் செயற்படவும் ஆசித்து நிற்கின்றோம். மேலும் இறைவனின் நிறைவான அருளும் ஆசியும் மரியன்னையின் பரிந்துரையும் பாதுகாவலும் உங்கள் அனைவரோடும் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*திருமதி மைக்கேல் முத்து நேசமலர்*
தலைவி,
வெற்றிமாதா மரியாயின் சேனை,
புனித இராயப்பர் ஆலயம்,
புன்னாலைக்கட்டுவன்.

# மனம் நிறைந்து வாழ்த்துகிறோம்



இறைவனின் திருத் திட்டத்திலும் கத்தோலிக்க திருஅவையின் விசுவாசவாழ்விலும் ஆன்மீக இறையியல் சிந்தனைகளிலும் முக்கியபங்கைப் பெற்றிருப்பவள் நம் தூய அன்னைமரியாள். தன் வாழ்நாளெல்லாம் தன்னில் உறைவதும், இயங்குவதும் அந்த இறைவனேயன்றி வேறல்ல என்ற அசையாத நம்பிக்கையில் கல்வாரிமலைவரை மீட்புப் பணிக்கு வீறுநடைபோட்ட நம் தாய் மரியாள் எல்லாப் படைப்புகளுக்கும் வானவர் சேனைகள் அணிகள் அனைத்திற்கும் நாயகியாக, தளபதியாக போற்றப்படுகின்றாள்.

திருச்சபையின் பணித்தளங்களில் மரியாளின் சேனையாளர்கள் இறைமக்களை இறைவனிடம் சேர்க்கும் பணியில் பல்வகை சேவைகளாற்றி வருகின்றனர். உரும்பிராய் பணித்தளத்திலும் மரியாளின் சேனையாளர் பக்திக்குழு உருவாக்கம் பெற்று ஐம்பதாவது அகவையை எட்டிப்பிடித்து இன்றுபொன்விழாவைக் காண்கின்றதென்பதையெண்ணும் போது அன்னை மரியின் பாடலைப் போன்று எம் ஆன்மாவும் இறைவனைப் போற்றிப் புகழ்கின்றது. அருட்தந்தை பெனற் கொன்சன்ரைன் அடிகளாரால் ஆக்கம் பெற்று விதையாக விழுந்த இச்சேனைகள் கூட்டம் இன்று விருட்சமாக விரிந்துள்ளது. தற்போதைய பங்குத் தந்தை யூட் நிக்ஷன் அடிகளாரின் உயர்ந்த வழிகாட்டலில் வளர்ந்துவரும் சேனையாளர்கள் அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த வாழ்த்துக்களைக் கூறிநிற்கின்றோம்! ஆன்மவாழ்வு வளர்ச்சியிலும் உடல், உளநல மனித நேயசேவைகளிலும் அன்னைமரியின் சேனையாளர்கள் எமது பங்கில் இற்றைவரை ஆற்றியசேவைகள் அளப்பரியன. ஆண்டாண்டு காலமாக பணியாற்றிவந்த பலஅருட்தந்தையர்களின் அயராது உழைப்பில் அணியாணியாக வந்து சேவையாற்றிய உறுப்பினர்கள் அனைவரையும் நன்றியுணர்வுடன் எண்ணிப் பார்க்கின்றோம். பழையவர்கள் புதியவர்களென சிறந்த சேவை செம்மல்களாக வளர்ந்துவரும் உங்களை நிறைவாக இறைவன் மென்மேலும் ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம்! முன்னேறிச் செல்வதே சேனைகள் பணி. இதையே மரியாள் நமக்கும் கற்பித்துத் தந்துள்ளாள். எனவே நமது பங்கின் பாதுகாவலர் தூய தளபதி மிக்கேலுடன் சேனையாளர் அனைவரும் முன்னேறிச் சென்று அன்னை மரியாளின் வழிகாட்டலுடன் இறையன்பு எனும் ஒளியை ஏற்றும் சிறுஎண்ணெய் விளக்குகளாக என்றும் எங்கும் விளங்க இப்பொன் விழாவில் செபத்தோடு வாழ்த்தி நிற்கின்றோம்.

*செல்வி சின்னமலர் மைக்கல்*
உரோமை

# மரியாளின் சேனை



*பெயர் எப்படி உருவானது?*

ஆரம்பத்தில் கத்தோலிக்கர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கமாக இயங்கி வந்தார்கள். இவர்கள் மரியாளின் பெயரில் சிறிய சங்கமாக இயங்கினார்கள்.

'வைகறை போல் தோற்றம், ஞாயிறு போல் ஒளி, சாத்தானுக்கும் அவனுடைய படையாட்களுக்கும், அணிவகுத்து நிற்கும் படையைப் போல் அச்சம் தருபவள்" அமல உற்பவ மரியாயின் சக்தி வாய்ந்த தலைமையில் கத்தோலிக்கர் கூடி தம்மையே ஒரு பெரிய சேனையாக்கி கொண்டமை மரியாயின் சேவையாகும். இப்படியே மரியாயின் சேனை என்று பெயர் உருவானது. உலகின் அதன் தீய சக்திகளுக்கு எதிராகவும், சாத்தானின் தீய வல்லமைக்கு எதிராக நின்று போராடும் படை பெரிய அணியாக மரியாயின் சேனை உருப்பெற்றது.

*சேவையின் தொடக்கம் எப்படி?*

மரியாயின் சேனையை நிறுவிய பிராங்க்ட.்.ப் என்பவரும் டப்ளின் உயர் மறை மாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை மைக்கல் தோகார் அடிகளாரும் இன்னும் சில கத்தோலிக்க பெண்களும் 1921ம் ஆண்டு செப்டெம்பர் 7ம் திகதி முதலாவது பிரசீடியத்தை ஆரம்பித்தார்கள். மரியாயின் சேனையின் நிறுவுனர் பிராங்க்ட.்.ப் ஆரம்பத்தில் தூய வின்சென்ட் தே பவுல் சபையில் சேர்ந்து பணிசெய்து கொண்டிருந்தார். இதன் பயனாக ஆழமான விசுவாசம் கொண்டவராக மன உறுதியோடு மரியாயின் பக்தனாக திகழ்ந்தார். மரியாளின் திருநாள் அன்று மரியாயின் சேனையை முதலில் ஆரம்பித்தார். ஏழைகள், நலிவுற்றோர், அநாதைகள், கைவிடப்பட்டோர் மட்டில் இவர் இரக்கம், பரிவுள்ளவராக இருந்தார். இதை அடிப்படையாகக் கொண்டு மரியாயின் சேனையின் ஊடாக இப்பணிகளைச் செய்தார் என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

*முதல் பிரசீடியத்தின் பெயர் என்ன?*

அயர்லாந்து நாட்டில், டப்ளின் நகரில் பிரான்சிஸ் வீதியிலுள்ள மீரா இல்லத்தில் 1921ம் ஆண்டு செப்டெம்பர் 7ம் திகதி மாலை 8.00 மணிக்கு முதலாவது பிரசீடியம் உருவாக்கப்பட்டது. இதற்கு பெயர் "இரக்கத்தின் மாதா".

*மரியாயின் சேனையின் நோக்கம் என்ன?*

உறுப்பினர்களைப் புதிய வாழ்விற்கு அழைப்பது, அதாவது புனிதப்படுத்தும் செயற்பாட்டுக்கு வரவழைப்பது. இதனூடாக கடவுளை மகிமைப்படுத்துவதாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற இரண்டு வழிகளுண்டு. ஒன்று செபம், இரண்டாவது சேவை செய்வதாகும். மரியாளின் மனப்பான்மையைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

**திருமதி தர்மலிங்கம் ஜெயரஞ்சினி**
உறுப்பினர்

# உரும்பிராய் மரியாயின் சேனையின் ஆரம்ப வரலாறு



சுவாமி ஞானப்பிரகாசர் விதைத்த விசுவாச வித்தானது முளைத்து பெரிய விருட்சமாகி கிளைகள் விழுதுகள் பரப்பி நிற்கிறது. எமது உரும்பிராய்த் திருச்சபையானது நூற்றாண்டை அண்மித்துச் சென்றுகொண்டிருக்கும் இவ்வேளையில் மரியாயின் சேனையாகிய பக்திச் சபை உருவாக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியடைந்து விட்டது என்று நினைக்கும் போது முதற்கண் இறைவனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம். மேலும் மரியாயின் சேனை என்ற உன்னதமான அப்போஸ்தலிக்க பணிவாழ்வின் மேலான அழைப்பிற் காகவும், இந்த அழைப்பினூடாக ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு அனுபவங்களுக்காகவும் ஆன்மீகத்தின் வளர்ச்சிக்காகவும் மரியன்னை வழியாக இறைவனுக்கு எமது ஆழமான நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

எமது பங்கிலே மரியாயின் சேனை எப்படி உருவானது? பங்கின் வளர்ச்சியிலே எவ்வாறு பணிபுரிந்து கொண்டு வருகின்றது? என்பதை ஒருசிலர் மட்டும் தெரிந்திருந்தால் போதாது. ஒவ்வொரு கத்தோலிக்கர்களும் விசேடமாக வருங்கால தலைமுறையினருக்கும் தெரிவிக்க வேண்டிய பொறுப்பில் நாம் இருக்கின்றோம். எனவே சேனையின் ஆரம்பகால உறுப்பினர்கள் பலர் இவ்வுலகை விட்டுச் சென்றாலும் இருக்கின்ற ஒருசிலரின் ஆதரவோடு ஆரம்பகால அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1962ம் ஆண்டு யாழ். ஆயராக வந்தனைக்குரிய J.எமிலியானூஸ்பிள்ளை அவர்கள் இருந்த காலத்தில் அருட்பணி பௌற் கொண்சன்ரைன் அவர்கள் உரும்பிராய் பங்கிற்கு வந்திருந்தார். (ஆனி மாதம்) அப்பொழுது எமது பங்கில் 120 – 150 க்கும் உட்பட்ட குடும்பங்கள் மாத்திரமே இருந்தன. பொருளாதாரம், கல்வி என்பவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையில் வறுமை என்னும் கோரப் பிடிக்குள் வாழ்ந்து வந்தார்கள். குத்தகைக் காணியில் தோட்டம் செய்பவர்களாக கூலி வேலை செய்பவர்களாகவும் இருபாலாரும் உணவுக்காக உழைத்து வந்தார்கள். இந்நிலையில் வந்திருந்த அருட்தந்தையவர்களும் மிகவும் கஸ்டத்தின் மத்தியில்தான் பணிபுரிய வேண்டியிருந்தது. இருந்தாலும் எமது மக்களின் வளர்ச்சியிலே அயராது அக்கறை கொண்டு ஆர்வத்தோடு செயற்பட்டார்.

ஆலயப் பணிகளையும், சிரமதானப் பணிகளையும் செய்வதற்கு மக்களில் அனேகமானோர் முன்வந்தார்கள். இளைஞர் யுவதிகள் பெருமளவில் பங்குகொண்டார்கள். ஆலயப் பணிகளில் மட்டுமல்ல, ஆன்மீக வளர்ச்சியிலும் கவனம் செலுத்தினார்.
முதற்படியாக, இறைவனின் நிறைந்த ஆசிரோடு ஒரு மரியாயின் சேனையை உருவாக்கி எமது பங்கின் வளர்ச்சிக்கு காலடி எடுத்து வைத்தார். 1964ம் ஆண்டு பெண்களுக்கு ஒரு சேனையை ஆரம்பித்து வைத்தார். சேனையை வழிநடத்துவதற்குத் தேவையான சொரூபம் சேனைக் கைநூல், செபப் புத்தகங்கள், (தெசரா) யாவற்றையும் மேற்சபையுடன் தொடர்புகொண்டு பெற்றுத் தந்தார். ஆலய வளவில் இடவசதிகள் இல்லாத காரணத்தால் அருகிலுள்ள பாடசாலையிலே கூட்டங்களை நடத்தி வந்தோம். கூட்டங்களைப் பொறுப்புடன் நடத்தக்கூடியவராக நான்கு பேரைத் தெரிந்துகொண்டோம்.

தலைவர் : திருச்செல்வம் இரத்தினம் (இறைபதமடைந்துவிட்டார்)
உபதலைவர் : செல்வி. ஞானமுத்து மரிய இராசேஸ்வரி (இறைபதமடைந்துவிட்டார்)
செயலாளர் : செபஸ்ரின் பவளம் (கற்றன்)
பொருளாளர் : ஞான வெளிச்சம் புஷ்பம் (இறைபதமடைந்துவிட்டார்)

சேனையின் அர்ப்பணம், சேனையின் நோக்கம், கடமைகள் பற்றி ஒவ்வொரு வாரமும் இரண்டரை மணித்தியாலம் விளக்கமளிப்பார். பணிபுரிய வேண்டிய கட்டாயம், எப்படிப்பட்டவர்களிடம் சேனையார் பணிபுரிய வேண்டும் என்பது பற்றி கைநூலை வாசித்து அடிக்கடி தெளிவுபடுத்துவார். ஒவ்வொரு வாரமும் நேரம் தப்பாது கூட்டத்திற்கு செல்வதும், பணிகள் புரிவதும் எல்லோருக்கும் ஆரம்பத்தில் மிகவும் கஷ்டமானதாக இருந்தது. இருந்தாலும் அருட்தந்தையவரின் ஆர்வத்தாலும் விடாமுயற்சியாலும் மரியன்னையின் அருளாலும் எமது பிரசீடியம் நல்ல முறையில் பணிகள் புரிய ஆரம்பித்தது. ஒவ்வொரு மாதமும் மேற்சபையுடன் தொடர்பு கொள்வதாலும் எமது பணிகள் மென்மேலும் வளர்ச்சி பெற்றது.

முதற்பணியாக, பங்கிலே மாணவர்களின் மறைக்கல்வி வகுப்புக்கள் ஆரம்பமாகின. ஒவ்வொரு ஞாயிறு வாரமும் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. திருக்குடும்ப கன்னியர் இருவரின் மேற்பார்வையில் இவ்வகுப்புக்கள் இடம்பெறும். மேலும் அநேகமான மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. இப்பணியை சேனையார் பொறுப்பெடுத்துக் கொண்டதால் மாணவர்கள் ஒழுங்கான கல்வியைப் பெற்று பலன் அடைந்தார்கள். இன்னும் பங்கிலே மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களிலே கூட்டுச் செபமாலை இடம்பெறும். ஒவ்வொரு வாரமும் எல்லோரும் பங்கு கொண்டார்கள்.

இவ்வாறு எமது ஆரம்ப சபை பணிகள் மிகவும் உற்சாகத்துடன் இடம்பெற்றதால் வயது வித்தியாசமின்றி பலரும் சேனையில் சேர முன்வந்தார்கள். அன்னையின் நிறைவான பரிந்துரையால் ஒரு வருடத்துக்குள் பல பிரசீடியங்கள் உருவாக்கப்பட்டன.

வளர்ந்தோர் - பெண்கள் பிரசீடியம்
வளர்ந்தோர் - ஆண்கள் பிரசீடியம்
இளையோர் - பெண்கள் - சருவேசுரனுடைய அர்ச். மாதா பிரசீடியம்
சிறுவர் - பெண்கள் - சகல அர்ச். இராக்கினி பிரசீடியம்
முதியோர் - ஆண்கள் பிரசீடியம்

ஐந்து பிரசீடியங்களும் சிறப்பான முறையில் பணிபுரிந்தன. எமது பங்கில் ஆன்மீக வளர்ச்சியைக் காணமுடிந்தது. மேற்சபை விழாக்களிலும் பங்குகொண்டு சேனையாரும் வெள்ளிவிழாக்களையும் கொண்டாடி மகிழ்ந்தோம். அன்று இருந்த பெண்களில் சிலர் இன்னும் தொடர்ந்து பணிபுரிந்து வந்தார்கள். இன்னும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. "சருவேசுரனுடைய அர்ச்.மாதா" என்ற பெயருடைய பிரசீடியம் இருபது பெண்களுடன் (18 வயதிற்கு மேல்) சிறப்பான முறையில் பணிபுரிவதுடன் பொன் விழாவையும் கொண்டாடி மகிழ்கின்றோம் என்பதையும் மகிழ்வுடன் கூறிநிற்கின்றோம்.

ஆரம்ப உறுப்பினர்
*திருமதி தவமணி பேரின்பநாதன்*
உபதலைவி

# மரியாயின் சேனையும் நிர்வாக சபைகளும் பொதுவான ஒழுங்குகளும்



சுவாமி ஞானப்பிரகாசியாரின் அத்திவாரத்தில் உருவாக்கப்பட்ட உரும்பிராய் பங்கில் மரியாயின் சேனை ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகள் நிறைவை எண்ணி உளம் மகிழ்ந்து நிற்கின்றோம். கடின உழைப்பும் விசுவாசமுமே எமது பங்குத் திருச்சபை தாங்கி நிற்கின்ற தூண்களாக இருக்கின்றன. எமது சேனையின் ஒழுங்குவிதிகளை சற்று ஆராய்ந்து அதன் கட்டுப்பாடுகளை வெளிப்படுத்த விளைகின்றேன்.

**ஒழுங்குகள்:**

- அனைத்து நிர்வாக கூட்டங்களும் குறித்த காலத்தில் நடைபெற வேண்டும்
- திருச்சபையின் அங்கீகாரம் இல்லாமல் ஒரு பிரசீடியம் அதாவது ஒரு பங்கு சேனையை ஏற்படுத்த முடியாது
- ஒவ்வொரு சபைக்கும் ஒரு குருவானவர் ஞான மேய்ப்பராக இருப்பார்
- ஒவ்வொரு சபைக்கும் ஒரு தலைவர் ஒரு துணைத்தலைவர் செயலர் பொருளாளர் இருக்க வேண்டும்
- சேனைக்கு மரியே அரசி சேனையின் பணியாட்களாக மகிமை மிக்க போருக்கு அழைத்து போர் வீரர்களுக்கு உந்துசக்தியாக செயற்பட வேண்டும்
- பங்கு சேனைகள் ஒவ்வொன்றும் மாவட்ட நிர்வாக சபைகளின் அமைப்பிலே பிரதிநிதிகளை உறுப்பினராக கொண்ட சபையாக இருக்க வேண்டும்
- கியூறியாவுக்கே சேனையின் எந்த உயர் நிர்வாக சபைக்கோ இரகசியமான முறையில் செய்தி தெரிவிக்க ஒவ்வொரு சேனையர்க்கும் உரிமை உண்டு
- ஒவ்வொரு பங்கு சேனையும் மேலுள்ள நிர்வாக சபைக்கு பண உதவி செய்ய கடமைப்பட்டுள்ளது. இந்நிதியானது இரகசிய வசூல் பை மூலம் சேகரிக்கப்படுகின்றது.

**தலைமைப் பொறுப்பு:**

தலைவர் ஆனவர் தன்னிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்ற வேண்டும். ஏனைய ஊழியர்களும் தலைவரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும். ஒரு பங்கில் இருக்கும் மரியாயின் சேனை பிரசீடியம் ஆகும். சவால் விடுவது போல பிரச்சனைகளைத் தூண்டுவது போல விதண்டா வாதம் வார்த்தைப் பிரயோகங்களை தலைவர் பாவிக்கக் கூடாது.

**உறுப்பினர்கள் கைக்கொள்ள வேண்டியவை:**

- ஒரு சேனையின் இணக்கமான சூழ்நிலையைக் காப்பாற்ற மிகுந்த விழிப்புடன் செயற்பட வேண்டும்.
- பல்வேறுபட்ட சமூக குடும்ப சூழல் பின்னணியிலிருந்து வந்து ஒன்றுகூடும் உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து உழைத்து பழகிக் கொண்டவர்கள் அல்ல வேற்றுமைகள் ஏற்பட சந்தர்ப்பங்கள் உண்டு. இதையே பிரிவுத் தளர்ச்சி என்கிறோம். உலகம் என்றால் பிரிவின்மை என்று பொருள். வேற்றுமையில் ஒருமை உண்டு என்று உறுப்பினர்கள் உணர வேண்டும்.

## கியூரியா

எல்லா பிரசீடியங்களையும் ஆழ்வதற்கு நிறுவப்படும் ஒரு மறைமாவட்ட ரீதியிலான அமைப்பே கியூரியா ஆகும். சேனையின் உயர்வு தாழ்வு அதன் கியூரியாக்கள் இயங்கும் முறையைப் பொறுத்திருக்கும்.

ஒவ்வொரு கியூரியாவும் அதன் சேனைகளின் இதயமாக இருக்கின்றது.

ஆண்டுதோறும் 2 முறை தன் பார்வையாளரை சேனைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## ரீஜியா

ஒரு பெரிய மண்டல நிலப்பரப்பில் இயங்கும் சேனையின் மேல் அதிகாரம் செலுத்துவதற்காக நியமிக்கப்படும் ஒரு நிர்வாக சபையே ரீஜியா.

## செனாத்தூஸ்

ஒரு நாடு முழுவதும் உள்ள சேனை மீதி அதிகாரம் செலுத்துவதற்காக கொன்சீலியத்தால் நியமிக்கப்பட்ட சபையே செனாத்தூஸ்.

## கொன்சீலியம்

உலகளாவிய சேனை முழுவதையும் ஆண்டு நடத்தும் அமைப்பே கொன்சீலியம். இது அயர்லாந்திலுள்ள டப்பிளின் என்னும் இடத்தில் மாதம் தோறும் கூடுகின்றது.

***திருமதி பொனிப்பாஸ் மரியகொறந்றி***
உறுப்பினர்

## மரியாயின் சேனை - யாழ் மறை மாவட்டம்
## யாழ். கொமிற்சியம்



எமது உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பங்கில் மரியாயின் சேனை ஆரம்பமாகி 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடி மகிழ்ந்திருக்கும் இவ்வேளையில் 50 ஆண்டுகளாக இறைவன் எம்மோடு இருந்து எம்மைப் பல வழிகளிலும் பாதுகாத்து பராமரித்து வந்ததையும், அன்னை மரியாளின் பரிந்துரையும், புனித மிக்கேல் அதிதூதரின் பாதுகாப்பும், பராமரிப்பும் நிறைவாகக் கிடைத்ததையிட்டு எமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து இறைவனுக்கு கோடானகோடி நன்றிகள் உரித்தாகுக!

### யாழ்ப்பாண கியூறியாவில் அமைந்துள்ள பிரசீடியங்கள்

| பிரசீடியம் | |
|---|---|
| 1. மாசற்ற இருதய மாதா | யாழ்ப்பாணம் |
| 2. பரிசுத்த கார்மேல்மாதா | யாழ்ப்பாணம் |
| 3. ஞானப்பாத்திரமாதா | யாழ்ப்பாணம் |
| 4. கன்னியங்களின் இராக்கினி | யாழ்ப்பாணம் |
| 5. இயேசுவின் மாதா | யாழ்ப்பாணம் |
| 6. பாவிகளுக்கு அடைக்கலம் | யாழ்ப்பாணம் |
| 7. பிதாப்பிதாக்களின் இராக்கினி | சுண்டுக்குழி |
| 8. சிருட்டிகரின் மாதா | சுண்டுக்குழி |
| 9. சக்தியுடையவர்களாய் இருக்கிற கன்னிகை | குருநகர் |
| 10. பரலோகத்தின் வாசல் | குருநகர் |
| 11. தேவ வரப்பிரசாதத்தின் மாதா | குருநகர் |
| 12. அமல உற்பவ அன்னை | பாண்டியன்தாழ்வு |
| 13. இரட்சகருடைய மாதா | பாஷையூர் |
| 14. மாசில்லாக்கன்னி | பாஷையூர் |
| 15. இறைவாக்கினரின் அரசி | கொய்யாத்தோட்டம் |
| 16. மகாபரிசுத்தமாதா | நாவாந்துறை |
| 17. பரலோகத்திற்கு ஆரோபணமாதா | நாவாந்துறை |
| 18. மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதா | நாவாந்துறை |
| 19. மாசில்லாமல் உற்பவித்த மாதா | அஞ்சனந்தாழ்வு |
| 20. லூர்துமாதா | அரியாலை |
| 21. கிறிஸ்துவின் மாதா | நல்லூர் |
| 22. சருவேசுரனுடைய அர்ச், மாதா | உரும்பிராய் |
| 23. சமாதானத்தின் இராக்கினி | நீர்வேலி |
| 24. மகா புத்தியுடைத்தான கன்னிகை | குளமங்கால் |
| 25. புதுமை மாதா | யூலனூர் |
| 26. வெற்றி மாதா | புன்னாலைக்கட்டுவன் |

## தீவகம்

பிரசீடியம்

| | |
|---|---|
| 1. வியாகுலமாதா | நாரந்தனை |
| 2. சின்னமடுமாதா | சின்னமடு |
| 3. பரலோக இராக்கினி | ஊர்காவற்றுறை |
| 4. வாக்குத்தத்தத்தின் பேழை | நெடுந்தீவு |
| 5. மகாவணக்கத்துக்குரிய இராக்கினி | மெலிஞ்சிமுனை |

## பருத்தித்துறை

பிரசீடியம்

| | |
|---|---|
| 1. இரக்கத்தின் மாதா | மணற்காடு |
| 2. தாவீதின் கோபுரம் | மணற்காடு |

## இளவாலைக் கியூறியா

பிரசீடியம்

| | |
|---|---|
| 1. ஆரோக்கியமாதா | மானிப்பாய் |
| 2. அடைக்கலநாயகி | ஆனைக்கோட்டை |
| 3. இரக்கத்தின் மாதா | நவாலி |
| 4. பற்றிமா மாதா | பண்டத்தரிப்பு |
| 5. மோட்சானந்தமாதா | மாசிப்பிட்டி |
| 6. நற்சகாயமாதா | சில்லாலை |
| 7. தயையுள்ள கன்னிகை | இளவாலை |
| 8. திரு இருதயத்தின் மாதா | தேவர்கட்டு |
| 9. நல்லாலோசனை மாதா | சுன்னாகம் |
| 10. பரலோக மாதா | சில்லாலை |
| 11. சம்மனசுகளின் இராக்கினி | இளவாலை |
| 12. சகல புனிதர்களின் இராக்கினி | மல்வம் |
| 13. செபமாலை மாதா | மாதகல் |

## முல்லைத்தீவு கியூறியா

பிரசீடியம்

| | |
|---|---|
| 1. தருமத்தின் கண்ணாடி | ஒட்டுசுட்டான் |
| 2. விடியற் காலத்தின் நட்சத்திரம் | வற்றாப்பளை |
| 3. சமாதானத்தின் அரசி | வண்ணாங்குளம் |
| 4. சமாதானத்தின் இராக்கினி | முள்ளியவளை |
| 5. மாசற்ற கன்னிகை | சிலாவத்தை |
| 6. வரப்பிரசாதமாதா | செல்வபுரம் |
| 7. நல்லாலோசனை மாதா | அளம்பில் |
| 8. மகிமைக்குரிய பாத்திரம் | மாமூலை |

## கிளிநொச்சி

பிரசீடியம்

| | | |
|---|---|---|
| 1. | வரப்பிரசாதமாதா | கிளிநொச்சி |
| 2. | நல்லாலோசனை மாதா | கிளிநொச்சி |
| 3. | கிறிஸ்துவினுடைய மாதா | உருத்திரபுரம் |
| 4. | அமல உற்பவமாதா | கல்மடு |
| 5. | சகாயமாதா | அம்பாள் குளம் |
| 6. | ஞானத்தின் இருப்பிடம் | பாரதிபுரம் |
| 7. | பரலோகத்தின் மாதா | வட்டக்கச்சி |

## முளங்காவில்

பிரசீடியம்

| | | |
|---|---|---|
| 1. | வேத சாட்சிகளின் இராக்கினி | இரணைமாதா நகர் |
| 2. | பரிசுத்த செபமாலை இராக்கினி | இரணைமாதா நகர் |
| 3. | சமாதானத்தின் இராக்கினி | இரணைமாதா நகர் |
| 4. | நல்லாலோசனை மாதா (பாலர்) | இரணைமாதா நகர் |
| 5. | ஆச்சரியத்துக்குரிய மாதா | வலைப்பாடு |
| 6. | சகல வரப்பிரசாத மாதா | வலைப்பாடு |
| 7. | பரிசுத்த செபமாலை மாதா | வலைப்பாடு |
| 8. | கன்னியர்களின் இராக்கினி | நாச்சிக்குடா |
| 9. | ஆரோக்கியமாதா | நாச்சிக்குடா |

**திருமதி ஞானமலர் குணரத்தினம்**
உறுப்பினர்
(முன்னாள் தலைவர்)
(1995 – 2010)

## யூபிலி ஆண்டின் சேனையர்கள்

1. திரவியநாதன் வினிவிறெட் (தலைவர்)
2. பேரின்பநாதன் தவமணி (உப தலைவர்)
3. மரியநாதன் புஷ்பராணி (செயலர்)
4. வடிவேல் பேரின்பம் (பொருளாளர்)
5. குணரத்தினம் ஞானமலர் (முன்னாள் தலைவர்)
6. மரியதாஸ் இரத்தினம் ((முன்னாள் உபதலைவர்)
7. பொனிப்பாஸ் மரியகொறற்றி
8. லெஸ்லிதுரை அல்வீனம்மா
9. யோசேப் எலிசபேத்
10. ரெங்கராஜ் நிர்மலா
11. செல்வசிங்கம் வுளோறன்ஸ்
12. தர்மலிங்கம் ஜெயரஞ்சினி
13. சாந்தப்பு இரஞ்சிதமலர்
14. கமில்ரன் விஜயகுமாரி
15. சென்போல் பிரியா
16. யோண் பிரதாபன் சரோசா
17. ஜெயராஜ் இரஞ்சினி
18. டேவிற் பகிரதன் சுஜீவா
19. இராசையா இராசேஸ்வரி
20. யோகராசா மரியஸ்ரெலா

## யூபிலி ஆண்டின் உதவி அங்கத்தவர்கள்

1. தை.பிலோமினா
2. இ.பேபிவசந்தா
3. யோ.புஷ்பமலர்
4. செ.யஸ்ரீனா
5. ம.பேரின்பநாதன்
6. வொ.மரியதயானி
7. டொ.பரீடா
8. அ.ஜீமலா
9. லூ.எலிசபேத்
10. ப.தவமலர்
11. சி.வனிதாமணி
12. ஞா. லெஸ்லிதுரை
13. பி.யூடிற்றா
14. யெ.யோகராணி
15. சி.தர்சிகா
16. யோ.கிருசாந்தினி
17. யோ.சோபியா
18. கு.ஜெயரஞ்சினி

## இறைவனடி சேர்ந்த ஆரம்ப சேனையாளர்

1. ஞா.ஞானப்பிரகாசம்
2. சி.மரியாம்பிள்ளை
3. சி.அருட்பிரகாசம்
4. த.மனுவேற்பிள்ளை
5. ஞா.விசுவாசம்
6. தே.செபமணி
7. தா.பாக்கியம்
8. யோ.அமலோற்பவம்
9. வி.பாக்கியம்
10. செ.மரியம்மா
11. அ.அன்னம்மா
12. மோ.சின்னம்மா
13. ஞா.புஷ்பம்
14. ஞா.மரிய இராசேஸ்வரி
15. தி.இரத்தினம்
16. அ.திரவியம்

## மரியாயின் சேனையினுடைய நோக்கமும் சேவை மனப்பான்மையும்



இறைமகனான இயேசுவின் தாயாக இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட விலைமதிப்பற்ற மாணிக்கமே மரியாள். இறைவனின் தாயானது தொடக்கம் முதல் விண்ணேற்றம் வரை இவ்வுலகில் வாழும் போது தன்னாலான பல சேவைகளை அயலவருக்கு வழங்கினார். அதேபோல் இன்றுவரை இறைவனுடன் விண்ணுலகில் வீற்றிருந்து அருள் வளங்களை வாரி வழங்குகின்றார். தன்னைத் தொடர்ந்து தன் மக்களும் இப்பணியைத் தொடர வேண்டுமென்பதற்காக இறைவனின் திருவுளப்படி உருவானதே இம்மரியாயின் சேனை ஆகும்.

இம்மரியாயின் சேனையின் நோக்கம் என்னவெனில் உறுப்பிர்களைப் புனிதப்படுத்துவதன் வாயிலாகக் கடவுளை மகிமைப்படுத்துவதே சேனை ஆகும். மரியாள் இவ்வுலகில் வாழும்போது செபமும் சேவையுமாக தூய்மையான வாழ்வை மேற்கொண்டாள். எனவே செபத்தையும், சேவையையும் இரு கருவியாகக் கொண்டு இந்நோக்கத்தை மரியாயின் சேனையினர் அடைய வேண்டும். 'மரியாயின் சேனை திருச்சபையின் உண்மையான முகத்தோற்றத்தைப் பிரதிபலிக்கின்றது' என்று புனித பாப்பு 23ம் அருளப்பர் கூறினார். இதன்படி திருச்சபையின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு சேனைக் கொன்சீலியத்தின் ஒப்புதல் பெற்று இவ் மரியாயின் சேனையானது இயங்குகின்றது. இதனை பொதுநிலையினரின் மறைதூதுப்பணி என்றும் குறிப்பிடலாம்.

இதன் மனப்பான்மையானது மரியாளின் மனப்பான்மையாகும். சிறப்பாக அவளிடம் விளக்கிய தாழ்ச்சி, குறையற்ற கீழ்ப்படிதல், வானவருக்குரிய இனிமை, இடையறாத செபம், நீடித்த ஒறுத்தல், பழுதற்ற கற்பு, வீரம்பொருந்திய பொறுமை, தெய்வீக ஞானம், தன்னலம் துறந்த தியாகம், நிறைந்த இறையன்பு, ஈடுஇணையற்ற விசுவாசம் போன்றன முக்கியமானதாகும். எனவே மரியாளை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு 'செய்ய இயலாதென்று ஒருபோதும் முறையிடுவதில்லை. தன்னால் எல்லாம் இயலுமென்றும், செய்ய வழியுண்டென்றும் நம்புகின்றது. (கிறிஸ்துநாதர் அனுசாரம் 3:5) என்பதற்கிணங்க செயற்படுகின்றார்.

சேனையின் சேவையானது உரோமைப்படை வீரர்களிடம் வாழையடி வாழையாக பிரமாணிக்கம், வீரத்தன்மை, கட்டுப்பாடு, விடாமுயற்சி வெற்றியார்வம் முதலிய பண்புகளை கைக்கொண்டு செயற்பட வேண்டும். அதன்படி கடவுள் அருளும் எல்லா படைக் கலங்களையும் அணிந்துகொள்ள வேண்டும். கடவுளுக்கு உகந்த தூய உயிருள்ள பலியாக எங்களை அர்ப்பணித்தல், கடின உழைப்புக்கும் துன்ப வருத்தங்களுக்கும் அஞ்சலாகாது. கிறிஸ்து எங்களுக்காக தம்மை, நறுமணம் வீசும் பலியும், காணிக்கையுமாக கடவுளிடம் ஒப்படைத்து அன்புகூர்ந்தது போல, நாங்களும் அன்பு கொண்டு வாழுதல், நாம் பெற்றுக்கொண்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுதல் போன்றன மரியாயின் சேனையின் முக்கிய சேவைகளாக காணப்படுகின்றது. "தம் வாழ்வையும் மறைதூதுப் பணியையும் அவரது தாய்க்குரிய கண்காணிப்பிற்கு ஒப்படைப்பார்களாக" என்ற எண்ணக்கருப்படி செயற்படுகின்றார்கள்.

*திருமதி செல்வசிங்கம் புளோறன்ஸ்*
உறுப்பினர்


உரும்பிராய் பங்கின் அயல் ஆலயங்களின் பிரசீடியங்கள்
உரும்பிராய்
நீர்வேலி
LEGIO MARIAE
யூலனூர்
புன்னாலைக்கட்டுவன்

# மீட்புப் பாதையில் மரியாளின் பங்கு



அம்மா என்று கேட்டாலே நம் மனம் குளிரும், மகிழ்வடையும். உலகில் எந்த மொழியிலும் மேன்மையான சொல்தான் "அம்மா". இந்த "அம்மா" என்ற சொல்லை இறை மகனான இயேசு அழைப்பதற்கு காரணமானவரே அன்னை மரியாள். திருவிவிலியத்தில் மரியாளைப் பற்றி முன்னுதாரணங்கள் இருப்பதைக் காணலாம். பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த பெருமைமிகு பெண்கள் பலர். அவர்களுள் விவிலியத்தில் குறிப்பிட்ட பெண் முத்துக்களில் முக்கியமானவர் அன்னை மரியாள். "பால் குடிக்கும் தன்மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன்" என்று கூறி தாயின் மேன்மையையும் இறையன்பையும் உணர்த்துகின்றார்.

தொடக்கநூலில் கடவுள் பாம்பிடம் "உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன் அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும் நீ அதன் குதிக்காலை காயப்படுத்துவாய்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பெண்ணாகக் குறிப்பிடப்பட்டுள்ளது மரியாளையாகும். இதிலிருந்து மரியாளைப் பற்றி தொடக்கநூலில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

இயேசுவின் வாழ்க்கையில் மரியாளின் பங்கை நோக்குவோமானால் "அருள் நிறைந்தவளே வாழ்க ஆண்டவர் உம்முடனே" என கபிரியேல் வானதூதர் மரியாளைப் புகழ்கின்றார். (லூக் 1:28) அத்துடன் பெண்களுக்குள் ஆசிர்வதிக்கப்பட்டவர் நீர் என ஆசி வழங்க மரியாளின் குணாதிசயங்களும் பற்றுறுதியும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இவ்வார்த்தைகளை நம்பி "இதோ ஆண்டவருடைய அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று இறை சித்தத்திற்கு பணிந்தார். இறைவனை கருவிலே சுமந்தவர் பயபக்தியுடனும் தாழ்ச்சியுடனும் நடந்து கொண்டார். இறைவனின் மீட்புத் திட்டத்திற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றார் மரியாள்.

முதிர்ந்த வயதில் எலிசபெத்து கருத்தரித்திருக்கிறாள் என்று அறிந்த உடனே அவளைக் காண்பதற்காக தொலைதூரம் பயணம் செய்து எலிசபெத்தை வாழ்த்தவும் உதவி செய்யவும் அவரைத் தேடி மாதா செல்கின்றார். மாதாவைக் கண்டவுடன் எலிசபெத் "என் ஆண்டவருடைய தாய் என்னிடம் வர நான் பேறு பெற்றது எப்படி" என வியந்து தன் மகிழ்வை பகிர்ந்துகொள்கின்றார். மரியாள் இறைவனுக்கு நன்றிப் பாடல் பாடுகின்றார். ஆனால் அவர் "நான் இறைவனின் தாய்" என்று அகங்காரம் கொள்வில்லை. இதையெல்லாம் மனதில் இருத்தி சிந்தித்து இறைசித்தம் நிகழ உதவி செய்தார் (லூக் 2:19). இயேசுவின் பன்னிரெண்டாம் வயதில் இயேசு காணாமல் போய் மூன்றாம் நாள் கோவிலிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ள போது "ஏன் இப்படிச் செய்தாய் மகனே உன் தந்தையும் நானும் உன்னைக் கவலையோடு தேடினோமே?" என்று மரியாள் கேட்கிறாள். இதிலிருந்து மரியாள் இயேசுவின் மீது எவ்வளவு அன்பு கொண்டுள்ளாள் என்று அறியக்கூடியதாக உள்ளது. இறை சித்தத்தை ஏற்றுக்கொள்கிறார். கானாவூர் திருமணத்தின் போது இயேசு தண்ணீரை இரசமாக்கி முதல் புதுமையைச் செய்வதற்கு தூண்டுதலாக இருந்தவர் இயேசுவின் தாய் மரியாள் ஆவார். இயேசுவின் கல்வாரியை நோக்கிய பயணத்தின் போது கூட நடந்தார். இயேசுவின் மரணத்தின் போது சிலுவையில் அடியில் நின்றபோது "இதோ உன் தாய் இதோ உன் மகன்" என இயேசுவால் உலகிற்கே தாயாகக் கொடுக்கப்பட்டுள்ளார். இயேசுவின் உயிர்ப்பின் பின் துணையாளரின் வருகைக்காகவும் திருச்சபையின் ஆரம்பத்திற்காகவும் சீடர்களுடனும் சேர்ந்து இறைவனிடம் செபித்தார். இவ்வாறு மீட்புப் பயணத்தில் இறைவனுடன் கூட நடந்தவர் என்ற பெருமையை சூடிக்கொள்கின்றார். இவ்வாறாக மரியாள் பெரிதும் இயேசுவின் மீட்பின் பாதையில் துணையாக நின்றவரான நற்செய்தியாளர்களால் வர்ணிக்கப்படுகின்றார். இவ்வாறு மரியாளின் பெருமை உலகெங்கும் பரவிக் காணப்படுகின்றது.

*திருமதி. வடிவேல் பேரின்பம்*
பொருளாளர்
மரியாயின் சேனை, உரும்பிராய்.

# மரியா நற்கருணைப் பேழை

பெண்களுள் தேர்ந்து கொள்ளப்பட்டு ஆசீர் பெற்றவர்
மண்ணுலக மக்களுக்காய் மகனிடம் பேசுபவர்
விண்ணுலகோர் போற்றிடும் விண்ணக அரசியாகப் பேறு பெற்றவர்
கண்ணிமைபோல் காக்கும் கருணைமிகு கன்னி -வழி தொடர்வோம்

தூதரின் வார்த்தைக்கமைய ஆகட்டும் என்றவர்
நாதனைத் தாங்கிய மேன்மை மிக்க முதல் பேழையானவர்
விரைகின்றார் வயது முதிர்ந்தவரின் உறவுப் பகிர்வுக்காய்
மறைந்திடும் மனிதமாண்பு காக்கும் புனிதை -வழி தொடர்வோம்

இயேசுவைத் தாங்கியராய் அவரில் அவருக்காய் அவரோடு
தந்தையைப் போற்றிடும் உயர்ந்த உன்னத நிலை பெற்றவர்
சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்று பணித்த
சொல்லை எமது வாழ்வாக்கிட தாய் -வழி தொடர்வோம்

முதியோரை மதித்து வறியோரை ஆதரித்து
எதிரிகளை மன்னித்து இல்லாதோர்க்கு பகிர்ந்திட
முதலும் மேலானதும் புகழ்ச்சியும் நன்றியுமுள்ள
நற்கருணையாக வாழ்ந்த மரியா -வழி தொடர்வோம்

கண்ணியமாய் கடமைகள் செய்து குடும்பத்தில்
உண்மையின் ஊழியனாய் துன்பங்கள் தாங்கி
நன்மைகள் செய்து பிறருக்காய் வாழ்ந்திடும்
நற்கருணை வாழ்வை வளப்படுத்த அன்னை -வழி தொடர்வோம்

மலிந்த வலைப்பின்னலின் தாக்கமும் கலாச்சாரச் சீரழிவும்
பொலிந்த போதையும் இன்று அரங்கேறும் சமூகத்தில்
எம்மாவு சீடரின் கண்கள் திறந்த அப்பமாகவும்
இம்மையில் உயிருள்ள பேழையாகப் பயணிக்க அம்மா -வழி தொடர்வோம்

*திருமதி பேரின்பநாதன் தவமணி*
உபதலைவர்
மரியாயின் சேனை, உரும்பிராய்.



அலுவலக உறுப்பினர்களுடன் பங்குத்தந்தை

மன்னார் ஆயருடன்

யாழ் ஆயருடன்

மன்னார் ஆயருடன்

ஆன்மீக இயக்குனருடன்

சேனையரின் பணி ஆலயத்தில்

## காணாமல்போன பிள்ளைகளின் தாய்மாருக்கு ஆறுதலான மரியா

"அவரைக் காணாததால் உறவினர்களிடையேயும்
அறிமுகமானவர்களிடையேயும் அவரைத் தேடினர்" (லூக் 2.44)



இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த காணாமல் போதலானது இன்றும் எம்மை விட்டுவைக்கவில்லை. எம்மையும் பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்மாரின் வாழ்வையும் சீர்குலைக்க பல்வேறு வடிவங்களில் அது மீண்டும் மீண்டும் உருவெடுத்து நிற்கின்றது. என் பிள்ளை வளர்ந்து எத்தகையவன் ஆவானோ என்று தம் பிள்ளைகளின் சிறுவயது முதல் அவர்களுக்கு பசியாற்றும் போதெல்லாம் கற்பனை பல காணும் தாய்மாருக்கு இறுதியில் கொடுக்கப்படும் பதில் "நாங்கள் கைது செய்யவில்லை" என்பது தான்.

மறுபுறத்தில் அன்னை மரியாள் எத்தனை துன்பம் நேர்ந்தாலும் தாங்கிக் கொண்டாள். ஆயினும் இயேசு 12 வயதில் காணாமல் போனபோது சிமியோன் "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக் 2:35) முன்னறிவித்த வார்த்தையானது மரியாளின் இதயத்தைக் காயப்படுத்தியது. ஆயினும் பொறுமையுடன் இறை சித்தத்திற்கும் பணிந்தாள். ஆகவே நாம் இன்று எம்மத்தியில் வாழும் காணாமல் போன பிள்ளைகளின் தாய்மாருக்கு ஆறுதலாக அன்னை மரியாளை முன்னிறுத்துகிறோம்.

ஆறுதல் அளிப்பது என்பது சாதாரண விடயமல்ல ஆரம்பத்தில் எலிசபெத்தம்மாளுக்கு ஆறுதலாக இருந்த மரியாள் திருமண வீட்டில் இரசம் தீர்ந்தபோது தம் மகனூடாக அவ்வீட்டு உரிமையாளருக்கு ஆறுதல் அளித்த அதே மரியா சீடர்கள் அஞ்சி நடுங்கி பூட்டிய அறையினுள்ளே இருந்தபோது அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காக அவர்களுடனே தங்கியிருந்தாள் மரியா. இன்று பிள்ளைகளைப் பறிகொடுத்து அவர்களுக்கு என்ன நடந்தது என்றுகூட அறியமுடியாமல் தவிக்கும் ஒவ்வொரு தாய்க்கும் அன்னை மரியாள் கொடுக்கும் செய்தி "மகளே அஞ்சாதே" நான் இருக்கிறேன் உன் கவலை, துன்பம், வேதனை, அங்கலாய்ப்பு, தாய்ப்பாசம் அனைத்தையும் கொட்டிவிடு என்னிடம். உன் பிள்ளை காணாமல் போகவில்லை. மாறாக வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டார். ஆயினும் இதற்குக் காரணமானவர்கள் ஒருநாள் இறை நீதியில் அகப்பட்டுத்தான் ஆகவேண்டும்.

எனவே உன் கவலையை மறந்துவிடு என்று பிள்ளைகளைப் பறிகொடுத்த ஒவ்வொரு தாயையும் அன்னை மரியாள் தேற்றி நிற்கிறாள். ஏனென்றால் ஒரு பிள்ளையைப் பறிகொடுத்தவர்களுக்குத்தான் துன்பத்தின் எல்லை புரியும். இயேசுவைக் கயவர்களிடம் பறிகொடுத்தாள் அல்லவா அன்னை மரியாள் நிச்சயம் இழப்பின் விளிம்பில் நிற்கும் எம் ஒவ்வொரு தாயுள்ளத்திற்கும் அன்னை மரியாளின் ஆறுதலே கிடைக்கும். எனவேதான் காணாமல் போன நிலையில் அவர்கள் மரணித்து இருந்தால் அவர்களின் தாய்மாருக்கு ஆறுதலாக அன்னை மரியாளூடாக இறைஞ்சுவோம்.

*திருமதி யோசேப் எலிசபெத்*
உறுப்பினர்

# கிறிஸ்தவ குடும்பங்களின் முன்மாதிரிகையான தலைவி எம் அன்னை மரியாள்

உலகின் ஓர் தோற்றுவாயாக தாயானவள் திகழ்வதுடன் அவனியின் தாய்மை உலகம் போற்றும் ஓர் உன்னத நிலை. "ஆசைப்பட்ட அனைத்தினையும் இந்த உலகத்தில் வாங்க முடியும். ஆனால் அம்மாவை யாரும் ஒருபோது வாங்க முடியாது." அத்தகைய உயரிய பண்பும் மகிமையும் கொண்டவர்கள் அன்னையர்கள். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அவர் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" எனக் கூறும் வார்த்தை என்றும் அன்னையர்களுக்கு மகுடமாகவும், ஒளியாகவும் திகழவும் அவர்கள் அதற்கேற்ப வாழ்தலும் அன்னை மரியாவின் முன்மாதிரிகளைப் பின்பற்றி வாழ்வது சாலப் பொருத்தமுடையதாக அமையும். ஏனெனில் அன்னை மரியாள் எம் அனைவருக்கும் தாயாக அன்றும் இன்றும் என்றும் இறைவனால் எமக்கு அருளப்பட்ட ஓர் உன்னத பொக்கிசம். எனவே அவரது வாழ்வில் காணப்பட்ட பண்புகளை குடும்பத் தலைவிகள் அனைவரும் அறிந்து செயற்படும் போது இன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள குடும்ப மனித மாண்புக்கு எதிரான செயல்கள் அனைத்தும் களையப்பட்டு ஆரோக்கியமான ஓர் அன்புறவில் நிலைபெறும் கிறிஸ்தவ குடும்பங்கள் உருவாக வழி அமையும்.
அன்னை மரியாவின் வாழ்வில் வரும் ஒவ்வொரு செயலும் குடும்பத் தலைவியருக்கு முன்னுதாரணமாகவே அமைகின்றது.

- **இறைவன் மீது நம்பிக்கையும் கீழ்ப்படிவும்**

இறைமகன் இயேசுவை கருவுற்ற காலம் முதல் அவரது வாழ்நாள் முழுவதும் நம்பிக்கையும், கீழ்ப்படிதலும் உடையவராக இருந்தார். சிறப்பாக தன் கணவர் யோசேப்பிற்கு கீழ்ப்படிவு உடையவராகவும் அவர்மீது உயரிய நம்பிக்கை கொண்டு தமது திருக்குடும்ப வாழ்வினை வளமாக்கினார்.

- அன்பில் உயரிய நிலை

"அன்பு என்பது ஓர் இறையியல் பண்பு. அதில் தான் உள்ளது மனிதனின் மாண்பு" எனவே அன்னை மரியாள் குடும்பம் மட்டில் எந்த வேளையும் அன்புறவு கொண்டவராக வெறுப்போ விரக்தியோ இன்றி சந்தேகமோ சஞ்சலமோ இன்றி குடும்ப வாழ்வினை வளப்படுத்தியவள் அன்னை மரியாள்.

- அர்ப்பண வாழ்வு

குடும்ப வாழ்வு முழுவதும் அன்னை மரியாள் தனது கணவராகிய யோசேப்பிற்கும் மகனாகிய இயேசுவிற்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்தவர். எந்தத் துன்ப வேளையிலும் துயர் துடைப்பவராக தைரியப்படுத்துபவராக அவர் காணப்படுகின்றார். சிறப்பாக இயேசுவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்த வேளை சிமியோன் மரியாளைப் பார்த்து பின்வருமாறு கூறினார். "மரியா, உமது இதயத்தை ஓர் வாள் ஊடுருவும்" இவ்வார்த்தையின் பொருளை மரியாள் உணர்ந்தவராக மனதினைத் தைரியப்படுத்தி தம்மை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணித்த ஓர் தாயாகவே காணப்படுகின்றார்.

- அடக்கம் நிறைந்தவள்

மிகவும் அழகும், அறிவும் நிறைந்தவராக சுவர்க்கீன் அன்னம்மாளிற்கு என்றும் பணிந்து நடந்த மரியாள் எந்தவொரு வேளையிலும் பெருந்தன்மையுடனும் தான் வாழ்ந்த காலத்து கலாச்சார சூழமைவுகளைப் பின்பற்றி மற்றவர் மதிக்கும் வகையில் அடக்கம் நிறைந்த அன்னையாகவே வாழ்ந்துள்ளார்.

➢ வறுமையிலும் வாழும் மனப்பாங்கு

தனது பெற்றோருடன் வாழ்ந்த காலம் முதல் சிறப்பாக தனது திருமகனைப் பெற்றெடுக்கும் வரை எளிமையான விடயங்களை அவர் ஏற்றுக்கொண்டார். சிறப்பாக ஆடம்பரத்தினையோ செல்வச் செழிப்பான வாழ்வினையோ அவர் விரும்பாது 'இருக்கிறதே போதும்' எனக் கொண்டு தமது குடும்ப வாழ்வினை வாழ்ந்தவர்.

➢ தியாக வாழ்வு

எந்தவொரு அன்னையும் கண்டிராத துன்பத்தினையும் மன அழுத்தத்தினையும் கொண்டவராக வாழ்ந்தவர் அன்னை மரியா. ஆனால் அமைதியையும் இறைவனுக்காக ஏற்றுக்கொண்டு தம் குடும்பத்திற்காகவும் தன் மகனினால் மீட்புப் பெற்ற பிள்ளைகளின் நல் வாழ்வுக்காகவும் பல தியாகத்தினை செய்தவர் அன்னை மரியாள்.

➢ ஆன்மீக வாழ்வு

அன்னை மரியாள் தனது வாழ்வு முழுவதும் இறைவனுக்காக அர்ப்பணித்து வாழ்ந்ததுடன் ஆன்மீக வாழ்வின் வாஞ்சையினைத் தேடியவராகவும் அதனைப் பிறர் வாழ்விலும் எடுத்தியம்புபவராகவும் காணப்பட்டார்.

➢ செப வாழ்வு

அன்னை மரியாள் தனது வாழ்வு முழுவதும் செபத்திற்கு முதலிடம் கொடுத்தார். சிறப்பாக பிறருக்கும் செபத்தின் தார்ப்பரியத்தினை உணர்த்தியவராக வாழ்நாள் முழுவதும் செபத்தினால் எதையும் செய்ய முடியும் என்பதனை எமக்கு காலத்திற்கு காலம் வெளிப்படுத்தும் அன்னையாக இருந்து வருகின்றார்.

➢ பிறர் வாழ்வில் அக்கறையும் பரிந்துரையும் உதவும் மனப்பாங்கும் உடையவர்

தனது குடும்பம் மட்டில் அதீத அக்கறை கொண்டவராகக் காணப்படுகின்றார். 12 வயதில் இயேசு ஜெருசலேமில் தொலைந்துவிட்டார் என்பதனை அறிந்து ஓடோடிச்சென்று தம் மகனைத் தேடியவராகவும் தான் கர்ப்பமாயிருந்த காலத்தில் எலிசபெத்திற்கு உதவி புரிவதற்கு சென்று அவருக்கு பல்வேறு உதவிகளைச் செய்தவராகவும் கானாவூர் திருமண வீட்டில் இரசம் தீர்ந்துபோகவே தனது மகனிடம் பரிந்துரைத்து அக்குறையினை நிவர்த்திசெய்த ஒருவராகவும் அன்னை திகழுகின்றார்.

எனவே இன்றைய காலகட்டத்தில் குடும்பங்கள் மத்தியில் பிளவுகளும், பிரிவுகளும் குடி வெறி சண்டை சச்சரவு கொலை, ஆடம்பர வாழ்வு, கரு அழிப்பு, சினிமா மோகம், சந்தேகம், சொத்துக்களில் பிரியம் என பல்வேறு பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் இன்றைய சூழ்நிலையில் மனித மாண்புகள் அழிக்கப்பட்டு சிதைக்கப்பட்டு மனித மாண்பு என்றால் என்ன என்பதனை தேடும் நிலை காணப்படுகின்றது.

இத்தகைய நிலையினை மாற்றி அமைக்க குடும்ப பெண்களால் முடியும். ஏனெனில் குடும்பத்தின் குத்துவிளக்காக இருப்பவர், ஒளி கொடுப்பவர், அந்த ஒளி குடும்பங்களின் என்றும் பிரகாசிக்க எமக்கு முன்மாதிரியாக திகழ்பவர் அன்னை மரியா. அவரது மேற்கூறப்பட்ட பண்புகளை நமதாக்கி வாழும் போது குடும்பத்தில் மனித மாண்பு மிளிரும். மரியாளின் மகிமைகளையும் பெற்று திருக்குடும்பங்களாக நாமும் வாழ அன்னை மரியாள் என்றும் எமக்கு துணை நிற்பார்.

அன்பினால் உயிரூட்டம் பெற்ற – எம் குடும்பங்கள்
அன்னையின் வழியில் என்றும் பயணிப்போம்
மனித மாண்பை வளர்க்கும் குடும்பங்களாவோம்.

*திருமதி தி. வினிப்ரெட்* (தலைவி)
மரியாயின் சேனை, உரும்பிராய்.

# துன்பங்கள் மத்தியிலும் மரியாளின் விசுவாசம்



சுவாமி ஞானப்பிரகாசர் வீசிய வித்தில் முளைகொண்ட உரும்பையூர் எனும் கத்தோலிக்க கிராமம் விசுவாசத்தில் வேரூன்றி கிளைபரப்பி விழுதுகள் தாங்கி இருக்கின்றது. இந்த விழுதுகளில் ஒன்றே மரியாயின் சேனை. இந்த விழுதிற்கு வயது ஐம்பது எனும் போது மகிழ்ச்சி இருமடங்காகிறது. ஒரு மனிதனின் வெற்றிக்கும் தோல்விக்கும் விடாமுயற்சியும் கஸ்டங்களும் இன்றியமையாதவை.

"உங்கள் துக்கம் சந்தோசமாக மாறும்" என்கிறார் ஆண்டவர் இயேசு. இன்று பலர் தங்கள் மகிழ்ச்சியை உலகில் எங்கோ தொலைத்துவிட்டு சோகத்தில் வாழ்ந்து பிறரையும் சோகப்படுத்தி வருகின்றனர். வாய்விட்டு சிரிப்பதைக் கூட குறைசொல்பவர்கள் பலர் உண்டு. நமது நோய்களோ பலவீனங்களோ நம் மகிழ்ச்சியைக் குறைக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

சாட்சிய வாழ்வில் சாதனையாளர்களாக வாழ நாம் பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அதையே மரியன்னை நமக்கு கற்றுத் தந்திருக்கிறாள். விசுவாச வாழ்விற்கு நேர்மையும் உண்மையும் முக்கியமானவை. வாழ்வில் நாம் விரும்புவது அனைத்தையும் பெறுவது கடினம். ஒன்றைப் பெறுவதற்கு இன்னொன்றை விட்டுக் கொடுக்க வேண்டியது அவசியம். கடவுள் எங்கள் வாழ்வில் செய்த அரும் செயல்களை உணர்ந்து அறிக்கையிட்டு கடவுளுக்கு பணிந்து வாழும் போது அது இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வாகிறது.

என்னுடைய தனிப்பட்ட வாழ்வில் இறை பராமரிப்பையும் அருஞ்செயல்களையும் நன்றியுடன் நினைக்கிறேன். எனது 55 வது வயதில் மடுத் திருப்பதியை முதல் முதலாகத் தரிசித்து மரியன்னையின் ஆசீரைப் பெற்றுக்கொள்ள எனக்குக் கிடைத்த வாய்ப்பை எண்ணி உளம் மகிழ்கிறேன். அதே காலம்தான் மரியாயின் சேனையில் இணைந்து அன்னைக்கு பணிபுரிய எனக்கு அழைப்பு கிடைத்தது. துன்பங்கள் துயரங்கள் எமது வாழ்வை புடமிடுகின்றன. கடுகு விதை மிகச் சிறியது. ஆனாலும் அதன் பயன்பாடு மிகப் பெரிய அளவில் கருதப்படுகிறது. நம்மிடம் பல திறமைகள் இருக்கலாம், அதிகமான செல்வம் இருக்கலாம், அறிவாளிகளாக இருக்கலாம். இவைகள் பிறருக்கு பயன்படுகிறதா? என்பதில் உமது செயலோடு கூடிய விசுவாசம் அர்த்தம் பெறும்.

எனவே! வாழ்வில் தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வோம். உலக சிற்றின்பங்களில் மூழ்கி எமது விசுவாசத்தை இழந்துவிடாமல் மரியன்னையின் வழித்தடங்களைப் பற்றிக் கொண்டு எமது பயணத்தைத் தொடர்வோம்.

*திருமதி யோண்பிரதாபன் சறோஜா*
உறுப்பினர்

# புரட்சிப் பெண் மரியாள்



"நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்று கூறி தன்னை முழுவதும் அர்ப்பணித்த பெண் தான் எமது அன்னை மரியாள். இறைமகன் இயேசுவின் மீட்புத் திட்டத்திலே அன்னை மரியாள் பெரும் பங்காளியாக இருக்கின்றார். இயேசுவின் பிறப்பு முதல் அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு வரை அவருடன் கூட நடந்தவள் அன்னை மரியாள்.

புரட்சி எனும் பொழுது பெரியளவில் தனித்திருந்து பல்வேறு படைகளினை வைத்து வியக்கத்தக்க வகையிலே செய்து கொள்ளும் போராட்டம் தான் புரட்சியாகும். ஆம் அன்று எம் உலக நாடுகளிலே பிரான்சியப் புரட்சி, ரசியப் புரட்சி போன்ற புரட்சிகள் நடைபெற்றன.

ஆனால் எமது அன்னை மரியாள் இத்தகையதொரு பெரிய புரட்சியினை மேற்கொள்ளவில்லை. அவளின் புரட்சி மிகவும் அபூர்வமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

கபிரியேல் தூதர் "அருள்நிறை மரியே ..." என வாழ்த்தி ஒரு ஆண் மகவைப் பெற்றெடுப்பீர் என்பதைக் கூறும்போது "நானோ கன்னியாயிற்றே" என்று கலக்கமடையும்போது "அஞ்சாதீர்" என்று தூதர் திடப்படுத்தும்போது இது இறை சித்தம் என்று ஏற்றுக்கொண்டு ஆகட்டும் என்ற புரட்சி வார்த்தையை கூறி இயேசுவைத் தாங்கினாள். யேசுவைப் பெற்றெடுக்கின்ற காலத்தில் கூட அவளுக்கு இடம் கிடைக்கவில்லை. மாட்டுத் தொழுவத்திலே பெற்றெடுத்தாள். சாதாரண எம்மால் இன்று ஓர் மாட்டுத் தொழுவத்தில் ஒரு மணித்துளி கூட இருக்க முடியாது. ஆனால் எம் அன்னையின் இச்செயற்பாடு புரட்சிகரமானதொன்றுதான்.

உலக மீட்பரையே கருத்தாங்கிப் பெற்றது மட்டுமன்றி அவரை ஞானத்திலும் அறிவிலும் சிறந்து விளங்கி கடவுளுக்கும் மனிதருக்கும் ஏற்றவராக வாழ வழிகாட்டினாள். மரியாள் இறைவனைப் பெற்றெடுத்த தாய் மட்டுமல்ல அவள் எம் ஒவ்வொருவரின் தாயாகவும் திகழ்கின்றாள். இறைவனின் மீட்புத் திட்டத்திலே இணை பிரிக்க முடியாதவளாகவும் அன்னை மரியாள் காணப்படுகின்றாள்.

கானாவூர் திருமணத்திலே "இவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்........" என்று கூறி புரட்சிப் பெண்ணாகத் திகழ்கின்றாள். இயேசு தனது அன்னையை எம் எல்லோருக்கும் அன்னையாகக் கல்வாரியில் தன்னைத் தியாகப் பலியாக ஒப்புக்கொடுக்க முன்பு அன்புச் சீடர் வழியாக மனுக்குலத்திற்கு தாயாகத் தந்தார். அதேபோன்று அன்னையும் எம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். (யோவா 19:26:27) "இதே உம் தாய்...... இதோ உம் மகன்......" இதுவும் இயேசுவின் தாயாக இருப்பதுடன் மட்டுமன்றி உலகின் தாயாகவும் இருப்பது அன்னை மரியின் புரட்சியினையே சுட்டிக்காட்டுகிறது.

இறைவனின் தாய் அன்னை மரியாள் ஆன்மீக ரீதியான புரட்சித் தலைவனைப் பெற்றெடுத்தது அவரின் மீட்புப் பணியில் தோள்கொடுத்தாள். இன்று அவள் நாம் மீட்புப்பெற எங்களுக்காக மீட்புப்பணியில் பங்கெடுத்துக் கொண்டு இருக்கின்றாள் என்பது தெளிவாகிறது.

***திருமதி லெஸ்லிதுரை அல்வினம்மா***
உறுப்பினர்

# செபத்தின் மாதிரிகை மரியாள்



திருமுழுக்கின் வழியாக இறை மக்களாக அழைக்கப்பட்ட நாம் எமது ஆன்மீக வாழ்வை வளர்த்துக் கொள்ளவும், இறைவனில் நிலைத்திருக்கவும் செபம் இன்றியமையாததாகும். செபம் என்பது எம் முழு உள்ளத்தால் இறைவனோடு உரையாடுவதே செபமாகும். எமது உள்ளத்தில் செயற்படும் தூய ஆவியின் ஏவுதலால் கிறிஸ்துவில், இறை தந்தையோடு ஏற்படுத்திக் கொள்ளும் உறவு செபமாகும்.

இறை நம்பிக்கை, இறை விசுவாசம், இறை அன்பு ஆகிய இறை சார்ந்த புண்ணியங்கள் எம்மில் செயற்பட்டு, எம் வாழ்வு பலனளிக்க செபம் அவசியமாகும். நாம் செபிக்கும் போது இறைவனில் விசுவாசம் கொண்டு அவரை நன்கு புரிந்து கொள்வதோடு எம் வாழ்நாள் முழுவதும் அவரிடம் வேண்டுவதாகும். இப்படிப்பட்ட மாபெரும் செயலை தன் வாழ்நாள் முழுவதும் அன்னை மரியாள் செய்தாள். திருவிவிலியம் எமது விசுவாசத்தை வளர்ப்பதோடு இறைவனுடன் மனதாலும், இதயத்தாலும் தொடர்பு கொள்வதற்கு வழி வகுக்கிறது.

இறை வார்த்தையை ஆழமாக சிந்தித்து இறைவனுடன் எவ்வேளையும் உரையாடினாள். இறை வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தமையால் மரியா இறை அன்னையாகும் வரத்தைப் பெற்றார். இறை வார்த்தைக்குச் செவிமடுத்தல் என்பது மரியாளின் விசேட குண இயல்பாகும். இறைவனின் அன்னையாக மீட்புத் திட்டத்தில் பங்கெடுக்க தெரிவுசெய்யப்பட்ட மரியன்னை தனது விருப்பத்தை இறைவனின் வல்லமைக்கு தனது செப வாழ்வின் மூலமாக ஒப்புக்கொடுத்தார். அவரிடம் காணப்பட்ட கீழ்ப்படிதலின் நிமித்தம் தூய ஆவியின் வரத்தால் முழுமை பெற்றார். செபத்திலே தன் வாழ்நாட்களைக் கழித்தார். தன்னை முழுவதும் இறை உரையாடலின் மூலம் இறைவனின் விருப்பத்திற்கு கையளித்ததனால் இறை அன்னையானார். (லூக் 1:48-55) மரியாள் தனது பாடல் மூலம் இறைவனின் மகிமையைப் புகழ்ந்து பாடினார்.

மரியன்னை தனது வாழ்வை செபத்தின் மூலம் வளம் பெறச் செய்தார். மேற்கூறிய விடயங்கள் வழியாக "செபத்தின் மாதிகை மரியாள்" என்பதை அறிந்து கொள்கிறோம். எனவே மரியன்னையின் அன்புப் பிள்ளைகளாகிய நாம் எம் ஆன்மீக வாழ்வை வளம்பெறச் செய்து செபம் அவசியம் என்பதை உணர்ந்தவர்களாக எப்போதும் எம் வாழ்நாளில் இறைவனுடன் உரையாடி மரியன்னையின் வழி செல்வோம்.

*திருமதி டேவிற் பகீரதன் சுஜீவா*
உறுப்பினர்



சேனையினறின் சுற்றுலாவின்போது









ஸ்தாபகருடன் உரும்பிராயில்...

# நம்பிக்கையின் நட்சத்திரம் மரியாள்



இந்த குடும்ப ஆண்டிலே மரியன்னையின் விசுவாச வாழ்வு மிகவும் அவசியமானதும் உன்னதமானதுமாகும். எல்லாப் புனிதர்களுமே இறை நம்பிக்கையின் ஒளியிலே வாழ்ந்து புனிதமடைந்தவர்கள். வேதாகமத்தைப் புரட்டிப் பார்க்கும் போது மரியாள் இறைவனின் நிறைவான அன்பும் நம்பிக்கையும் கொண்டிருந்ததால் எல்லாப் புனிதருக்கும் மேலாகவும் உயர்த்தப்பட்ட, எமது வாழ்வையும் மாற்றியமைக்க, மரியாள் ஒரு நம்பிக்கையின் நட்சத்திரமாக திகழ்கின்றாள்.

பழைய ஏற்பாட்டிலே ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தையாகத் திகழ்ந்தார். தாம் வாழ்ந்த சூழலையும், வாழ்க்கை முறையையும் விட்டுவிட்டு இறைவன் குரலுக்கு செவிமடுத்தார். அவரில் நம்பிக்கை கொண்டு இறைவனோடு ஒன்றித்தார். அவரின் நம்பிக்கையின் உச்சக்கட்டமாக, தனது ஒரே பேறான மகனைப் பலியிடவும் துணிந்தார்.

புதிய ஏற்பாட்டிலே நம்பிக்கையின் ஒளியாக திகழ்ந்தவள் மரியாள். அவள் புனிதர்களுக்கு எல்லாம் மேலானவள். இறைவனில் நம்பிக்கைக்குப் பாத்திரமாக வாழ்ந்ததால், உலக மீட்பரையே பெற்றெடுக்கும் தாயானாள். "இதோ ஆண்டவரின் அடிமை" (லூக் 1:38) என்று வானதூதருக்கு கூறியபோது தான் கன்னியாயிற்றே எப்படி நிகழும் என்று சிந்தித்த போதும், இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற நம்பிக்கையினால் இறை வார்த்தையை ஏற்றுக் கொண்டாள். இறை நம்பிக்கைக்குச் சான்றாக "உமது சித்தப்படியே ஆகட்டும்" என்று பதிலுரைத்தாள்.

மரியாளின் பாடலிலே "இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறு பெற்றவர்" (லூக் 1:48) என்பர். அந்தக் கூற்றுக்கமைய இறை மகனைப் பெற்றெடுத்த நாள்முதல் தூய ஆவியின் வருகை மட்டிற்கும், எந்நாளும் இறை மக்களின் தாயாகவும் நம்பிக்கையின் உறைவிடமாகவும் வாழ்கின்றாள். எலிசபெத் வயது முதிர்ந்த வேளையில் கருவுற்றிருப்பதை வானதூதர் கூறியதை நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டாள். பிறர் நலம் பேணும் தாயாக எலிசபெத்துக்கு உதவிக் கரம் கொடுக்க ஓடோடிச் செல்கிறாள். கானாவூர் திருமண விழாவிலே இரசம் தீர்ந்து விட்ட போது பிறரின் தேவை அறிந்து செயற்பட்டாள். இயேசு தண்ணீரை இரசமாக்குவார் என்ற நம்பிக்கையினால் அங்கு நின்றவர்களுக்கு கற்சாடிகளில் நீரை நிரப்பும்படி கூறினாள். மரியாளின் வார்த்தையில் நம்பிக்கை கொண்ட மக்கள் சந்தோசமாக நீரை நிரப்பினார்கள்.

இயேசுவின் சிலுவையடியிலே நின்ற அன்னையை நோக்கி "அம்மா இதோ உம் மகன்" சீடரைப் பார்த்து "இவரே உம் தாய்" என்ற யேசுவின் வார்த்தைகள் மரியாளுக்கு நம்பிக்கை ஊட்டின. இன்றைய காலகட்டத்தில் அந்த தாயின் அன்பையும் அருளையும் உணராத மக்களாக பலர் வாழ்கின்றனர். இன்றைய இளம் சமுதாயத்தினர் இறை நம்பிக்கை, பக்தி, தெய்வ பயம் இன்றி மனம் போன போக்கிலே வாழ்க்கையைச் சீரழிக்கிறார்கள். கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையானவர்கள் இன்னும் அதிகரித்துக்கொண்டும் வீணான அழிவுகளைச் சந்தித்துக் கொண்டும் இருக்கிறார்கள். பற்பல இடங்களில், பற்பல வடிவங்களில் காட்சி தந்த மரியன்னை மனுக்குலம் இறை நம்பிக்கையிலும், அன்பிலும் வளர வேண்டும் என்று அறைகூவல் விடுகிறாள். அவரின் அழைப்பிற்கு செவிமடுத்தவர்களாக மரியன்னை என்றும் நம்பிக்கையின் விடிவெள்ளி காட்டும் திசையில் பயணிப்போம்.

*திருமதி சாந்தப்பு நஞ்சிதமலர்*
உறுப்பினர்

# மரியாள் மனித இயல்புள்ளவர்



உலகம் இறைவனின் கைவன்மையால் ஆக்கப்பட்ட அழகியதோர் சித்திரம் இந்தச் சித்திரத்திற்கு உயிர் கொடுக்க மனிதன் இறை சாயலாகப் படைக்கப்பட்டான். இவ்வாறு மனிதனுக்கு சகல சுதந்திரங்களும் வழங்கப்பட்டது. அச்சுதந்திரங்களைத் தப்பாகப் பயன்படுத்திய மனிதன் தனது ஆசைக்கு அடிமையாகிப் பாவம் என்னும் குழியில் விழுந்தான். இவ்வாறு பாவக் குழியில் விழுந்த மனிதனை மீட்க இறைவன் மரியாளின் வழியாக தம் ஒரே பேறான மகனையே இவ்வுலகிற்கு அளித்தார். அவரே எம் மீட்பரான இயேசு கிறிஸ்து அவராலே தான் எமக்கு மீட்பும் விடுதலையும் அமைதியையும் அருள் வாழ்வையும் காண்கின்றோம்.

மரியாள் உலகிற்குச் செய்த அற்புதச் செயல்களைப் பார்ப்போமானால் மரியா யூதேய மலைநாட்டில் உள்ள செக்கரியாவின் வீட்டிற்கு சென்று எலிசபெத் கர்ப்பமாய் இருந்ததினால் அவளோடு இருந்து அவளை வாழ்த்தினார். அப்போது எலிசபெத் வயிற்றில் இருந்த குழந்தை துள்ளிற்று. மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்திற்கு வேண்டிய உதவியைச் செய்தருளினார். பின்பு தம் வீடு திரும்பினார்.

நம் தாய் மரியா கானாவூரில் ஒரு திருமண வீட்டிற்கு சென்ற போது அங்கு திராட்சை இரசம் தீர்ந்தவிடத்து உடனே அவ்வீட்டிற்கு வந்தவர்கள் ஏதாவது குறை கூறுவார்கள் என்று எண்ணி இயேசு கிறிஸ்துவிற்கு கட்டளையிட்டு அக்குறையை நீக்கினார்.

மனித மீட்பில் மரியாவுக்குள்ள பங்கை அலட்சியம் செய்வது இயேசுவை அலட்சியம் செய்வது போலாகும். உலக மீட்பரோடு மரியா இணைந்திருந்தார். உண்மையாகவே மரியாவிற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. உலக மீட்பரோடு மீட்புப் பணிக்கென உருவாக்கப்பட்ட படைப்புக்களில் மரியாள் மட்டுமே முன்னரே கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட உன்னத படைப்பாகும்.

எனவே சாதாரண மனித வாழ்வில் மரியாள் இறைவனுக்கு உகந்த மனித உணர்வுகள் உள்ளவளாகத் திகழ்ந்தாள் என்பது வேதாகமம் கூறும் உண்மை.

*திருமதி சென்போல் பிரியா*
உறுப்பினர்

# பேறு பெற்ற மரியாள்



இயேசுவின் அன்னை மரியாவின் பேறுபெற்ற நிலையைச் சிறப்பாக 2ம் வத்திக்கான் சங்க ஏற்பாட்டில் திருச்சபை என்னும் கொள்கைத் திரட்டு பின்வருமாறு கூறுகின்றது. அனைத்திற்கும் புத்துயிர் அளிக்கும் வாழ்வானவரையே உலகிற்கு ஈந்தவரும் இத்தகைய மாபெரும் நிலைக்குரிய கொடைகளால் கடவுளால் அணிசெய்யப் பெற்றவருமான இயேசுவின் அன்னையிடத்தில் இந்த ஆவல் சிறந்த முறையில் நிறைவேறுகின்றது. எனவே இறை அன்னை முற்றிலும் தூயவர் பாவக்கறை ஏதும் இல்லாதவர். தூய ஆவியினால் புதுப்படைப்பாக உருவாக்கப் பெற்றவர் என்று அவரை அழைக்கும் வழக்கம் திருத்தந்தையிடத்தில் நிலவியிருத்தல் வியப்பொன்று மில்லை என்று கூறப்படுகின்றது. மேலும் புனித அமிர்தநாதர் மரியாளைப் பற்றிக் கூறுகையில் "மரியா தாய் வயிற்றில் இருக்கும் போதே அவர் மற்ற அனைத்துப் புனிதர்களின் புனிதத்தைவிட மேன்மையான புனிதையாக இருந்தார்" என்கிறார்.

மேலும் அருள் மிகப் பெற்றவராய் வான தூதரால் வாழ்த்துப் பெறும் மரியாவுக்கு ஆண்டவரின் தாயாகப் போகும் நற்செய்தி சொல்லப்படுகின்றது. மரியா நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக் 1:38) என்று கூறி தன்னை இறைவனுக்கு முற்றுமுழுதாக அர்ப்பணித்து இயேசுவை தன் வயிற்றில் தாங்கிக் கொண்டவள். கடவுளுக்கு ஏற்புடையவராக இருந்ததால் இவர் இயேசுவைப் பெற்றெடுக்கும் பாக்கியம் பெற்றார்.

ஒருவர் இயேசுவை நோக்கி இதோ உம் தாயும் சகோதரர்களும் உம்மோடு பேச வேண்டும் என்று வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள்" என்றார். இயேசுவோ என் தாய் யார்? என் சகோதரர்கள் யார்? என்று கேட்டார். பின் சீடர் பக்கம் கையை நீட்டி என் தாயும் சகோதரர்களும் இவர்களே" விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களே என் தாயும் சகோதரனும் சகோதரியும் ஆவர் என்றார். (மத் 12: 47 – 50). அதாவது இறைவனது திருவுளத்தை நிறைவேற்றுவதால் உருவாகும் புதிய உறவை முதன்மைப்படுத்திக் கூறுகின்றார். இரத்தத்தினால் வரும் உறவிலும் பார்க்க இறை சித்தத்தால் வரும் உறவே மேலானது எனக் கூறுகின்றார். அந்தவகையில் இறை சித்தத்தை ஏற்று இயேசுவை உதிரத்தில் தாங்கிய மரியா அருள் மிகப் பெற்றவரே.

*திருமதி ரெங்கராஜ் நிர்மலா*
உறுப்பினர்

# வரலாறு படைத்த மரியாள்



நீதியென்று
எதைக் கருதுகிறாய்
நீதி வேண்டி நிற்போர்க்கு நீ சொல்லப்போகும் நற்செய்தி என்ன?

உன் சிலுவையை சுமந்து கொண்டு
துன்பப் படுபவர்களின் நலன்களுக்காக
உழைக்க உன்னிடம் தியாகம் உண்டா?

வாருங்கள் சமாதானத்திற்காக செப யுத்தம் செய்வோம்
நீதியை நிலை நாட்ட செபமாலை ஆயுதம் தூக்குவோம்

பிள்ளைகளை இழந்ததால் இராமாவில் எழுந்த
இராக்கேலின் அழுதல், இன்னமும்
ஒலித்துக் கொண்டிருக்கிறது முள்ளிவாய்க்காலில்

எல்லா இடங்களிலும் ஏரோதுகள் தோன்றியுள்ளனர்
எங்களை பிள்ளைகளை மரியாயின் கரங்களுக்குள் ஒன்று சேர்ப்போம்
நல்ல சமாரியனாக நீ பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்கிறாயா?
அன்றேல் நழுவிச் செல்லும் பரிசேயர் பரம்பரையா நீ?

குற்றத்தை சுட்டிக்காட்டி சத்திய முழக்கமிட்டு
கொல்லப்பட்ட யோவானா?
பதவியை பாக்க நீதியை அடகுவைத்த
பிலாத்துவா நீ?

இனிமேலும் கொலைகாரப் பரபாசையா
விடுவிக்கப் போகிறாய்? அன்றில் நாண்டு செத்த
யூதாசை போல காட்டி கொடுக்கப் போறாயா? - இல்லை
உன் வாழ்வு கல்லறையை தாண்டி
வரலாறு படைக்கட்டும்

வீறு கொண்டெழு மரியாயின் சேனையிலே
அடிமை விலங்குடைத்து வீரனாய், புனிதமடைவாய்.

**திருமதி மரியதாஸ் இரத்தினம்**
உறுப்பினர்



உரும்பிராய் உறுப்பினர்கள்



உரும்பிராய் உறுப்பினர்கள்



யாழ் மறை மாவட்ட ஆன்மீக இயக்குனருடன்



உரும்பிராய் உறுப்பினர்கள்



உரும்பிராய் உறுப்பினர்கள்

# மரியாளின் நற்குணங்கள்



அன்னை மரியாள் இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களுக்குள் மேலானவராகவும், பரிசுத்தமானவளாயும், விண்ணக மண்ணக இராக்கினியாகவும் உயர்த்தப்பட்டாள். இறைவன் தனது மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற அன்னை மரியாளைத் தெரிந்து கொண்டார். மீட்பரை கருத்தாங்கி பெற்றெடுத்தாள். மரியன்னை இவ்வுலகில் பிறக்கும் போதே மாசற்றவளாய் நற்குணங்களுடன் அவதரித்தாள்.

அன்பு, தாழ்ச்சி, பொறுமை, கருணை, பிறர் நலம் போன்ற நற்குணங்களில் சிறந்து வாழ்ந்து காட்டினாள். இறைவனையும், மற்றவர்களையும் மிகவும் **"அன்பு"** செய்தாள். இறைவனுடன் எப்போதும் செபித்து செப வாழ்வில் ஈடுபட்டாள்.

இறைவனின் திட்டத்தை கபிரியேல் வானதூதர் கூறியபோது **"தாழ்ச்சியுடன்"** அடிபணிந்து ஏற்றுக்கொண்டாள்.

இறைமகன் இயேசுவின் வாழ்வில் ஏற்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளையும், பாடுகள் மரணம் எல்லாவற்றையும் தன் உள்ளத்தில் சிந்தித்து **"பொறுமையோடு"** வாழ்ந்தாள். கானாவூர் திருமணத்தில் திராட்சை இரசம் தீர்ந்தபோது தன் திருமகன் இயேசுவால் தண்ணீரை திராட்சை இரசமாக்கி திருமண வீட்டினருக்கு கைகொடுத்தாள். இந்நிகழ்வின் மூலம் மரியன்னையின் **"கருணையைக்"** காண்கிறோம்.

மரியன்னை தனது உறவினரான எலிசபெத்தைச் சந்தித்து வாழ்த்தி 3 மாதமளவாக தங்கியிருந்து அவளுக்கு பணிவிடை புரிந்தாள். இதன் மூலம் அன்னையின் **"பிறர் நலத்தை"** நேசிக்கும் குணத்தைக் காண்கிறோம்.

அன்னையின் அன்புப் பிள்ளைகளாகிய நாமும் அவளது நற்குணங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்து இறைவனுக்கு ஏற்புடையவர்களாவோம்.

***திருமதி இராசையா இராஜேஸ்வரி***
உறுப்பினர்

# மனித மாண்புள்ளவளாக வாழ்ந்தாள் மரியாள்



இவ்வாண்டு எமது மறை மாவட்டத்தின் கருப்பொருள் "மனித மாண்புள்ள குடும்பங்களாக வாழ்வோம்" என்பதாகும். மனித மாண்பு என்பது மனிதன் இறை சாயலாகப் படைக்கப்பட்டான் என்பதும் இறை பாவனையால் உருவாக்கப்பட்டான் என்பதையும் ஏற்றுக்கொள்வதாகும். இதன் அடிப்படையில் வேதாகமத்தின் தொடக்க நூலில் மிகவும் சிறப்பாக மனிதனைக் கடவுள் எவ்வாறு படைத்தார் என்பதனைக் கூறுகின்றது. தனது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைத்து சிறப்பாக பெயரிட்டார் என்றும் கூறப்படுகின்றது.

மனித மாண்பு என்பது இறை சாயலைக் கொண்டது என்பது தெளிவு. ஆகவே மனிதனை மனிதனாக மதிப்பது என்பது இறை செயலாகும் என்று தொடக்கநூலாசிரியர் குறிப்பிடுவதாகும். மனிதனை மிருகமாகவோ அல்லது வேறு பொருளுக்கு சமமாகவோ கருதுவது என்பது இயற்கைக்கு எதிராக நாம் செய்யும் மிகப் பெரிய பாவமாகும். ஆகவே தான் மனித கொலை என்பது அனுமதிக்க முடியாத ஒரு செயலாகும். இதனை இவ்வுலகில் எவருக்கும் செய்ய அனுமதியில்லை. ஆகவேதான் இப்போது கொலைத் தீர்ப்பு என்பது மனித மாண்புக்கு எதிரான செயலாகும் என்று மனிதநேய ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆரம்ப காலத்தில் மரண தண்டனை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு பல்வேறு அரசர்கள் காலத்தில் அவ்வரசிற்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு மரணதண்டனையை விதித்தார்கள் என்பது வரலாறு எமக்குக் கூறும் பாடமாக இருக்கின்றது. ஆனால் தற்காலத்தில் இம்மரணதண்டனையை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் மனிதன் மாண்புள்ளவன் இறை சாயலைத் தாங்கி நிற்பவன். இறைவனின் பாவனையாக உருவாக்கப்பட்டவன். எனவே மனிதர்களாகிய எவருக்கும் மனித உயிரை எடுப்பதற்கு அதிகாரமும் உரிமையும் இல்லை.

வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மனிதனின் மாண்பைப் பற்றி மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. இறைவன் உலகைப் படைத்து அதை ஆண்டு நடாத்தும்படி மாண்புள்ள மனிதனைப் படைத்து பணிக்கின்றார். ஆகவே மனிதன் முழு உலகையும் பலுகிப் பெருகி ஆண்டு நடாத்த அதிகாரம் பெற்றவனாக இருக்கின்றான். புதிய ஏற்பாட்டிலும் மரியாள் மனித மாண்புள்ளவளாக விளங்கினாள் என்பது நாம் பல்வேறு சம்பவங்களினூடாக நாம் அறிய முடிகின்றது.

**மரியாளுக்கு கபிரியேல் தூதர் மங்கள வார்த்தை கூறியது**

"இதோ ஆண்டவரின் அடிமை" என்ற இறை வார்த்தையை ஏற்றுக் கொள்வது மாண்புள்ளவர்களுக்குரிய பண்பாகக் கருதப்படுகின்றது. இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற மனநிலை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. என்ன நடக்கப்போகின்றது என்று அங்கலாய்த்து தவித்துக் கொண்டிருக்கும் ஒரு மனநிலைதான் மரியாளுக்கு இருந்திருக்கும். "நானோ கணவனை அறியேனே" என்ற மன ஏக்கம் மரியாளை துன்பத்திற்கும் பதற்றத்திற்குமான நிலைக்கு அன்று தள்ளியிருக்கும்.

ஆனால் அவள் இறைவன் மேல் வைத்திருந்த ஆழமான விசுவாசம் அவளை மாண்புள்ளவளாக மாற்றி இறைவன் பால் இட்டுச் சென்றது என்பதை நான்கு நற்செய்திகளும் எமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

**காணாமல் போன சிறுவன் ஜெருசலேம் ஆலயத்தில் கண்டுபிடித்த நிகழ்வு**

"ஏன் மகனே இப்படி எங்களுக்குச் செய்தீர்" என்ற வார்த்தை கோப உணர்வை வெளிப்படுத்தினாலும் அந்த வேளையில் சிறுவன் இயேசுவை மதித்தாள். இறைவனின் அலுவல்களில் ஈடுபட்ட சிறுவன் யேசுவை மதித்தாள். இறைவனின் அலுவல்களில் ஈடுபட்ட இயேசுவை மாண்புள்ளவராக எண்ணி சிறப்பான முக்கியத்துவம் கொடுப்பதைப் பார்க்கின்றோம். மூன்று நாட்களாக வீதிகளிலும் உறவினர்களிடையேயும் அறிமுகமானவர்களிடையேயும் தேடிய மரியாளும் யோசேப்புவும் மிகவும் மனம் குழம்பியவர்களாகத் தான் ஆலயத்திற்குள் நுழைந்திருப்பார்கள் என்பது சித்தரிக்கக்கூடியதாக உள்ளது. ஆனால் இயேசுவின் செயற்பாடு மரியாளுக்கும் யோசேப்புவுக்கும் மனித மாண்பை மதித்து நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியதை எண்ணும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

**யார் என் தாய்? யார் என் சகோதரர்கள்?**

இவ் இறை வார்த்தை தாயையும் சகோதரர்களையும் மரியாதை குறைவாக எண்ணுவதைப் போல தோன்றினாலும் இதன் உண்மையான கருத்து என்னவென்றால் தாயின் மகத்துவத்தையும் சகோதரர்களின் முக்கியத்துவத்தையும் உணர்த்துவதற்காகவே இயேசு இப்படிக் கூறினார். என்னுடைய வார்த்தையின்படி வாழ்வோர் மாண்புள்ளவர்களாகவும் இறை மனிதர்களாகவும் வாழ்வார்கள் என்று கூறுவதைக் கவனிக்க முடியும்.

**அவர் சொல்லுமாப்போல் செய்யுங்கள்**

இவ்வார்த்தை கானாவூர் திருமணத்தில் மரியாள் தண்ணீர் பரிமாறிக் கொண்டிருந்த பணியாளருக்குக் கூறியது திருமணத்தில் குறை ஏற்படக் கூடாது என்று எண்ணி மரியாள் தனது மகனிடம் பரிந்துரைக்கின்றதைக் காணக்கூடியதாக உள்ளது. ஒரு நிகழ்விலோ அல்லது அயலவர்களின் நிகழ்விலோ குறையைக் கண்டுபிடித்து குற்றம் சாட்டுவதையோ அல்லது அவமானப்படுத்துவதையோ விரும்பாத மரியாள் தனது பரிந்துரையூடாக அக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று ஆர்வமாக பார்க்க முடிகிறது. இது மனிதாபிமான செயல் என்று பலராலும் கணிக்கப்படுகின்றது. ஆகவே மரியாளிடம் மனித மாண்பிற்குரிய செயற்பாடாக இது இருந்ததாக குறித்துக் காட்டுகின்றது.

**எலிசபெத் இயலாமல் இருக்கும் போது மரியாள் உதவி செய்தல்**

இயலாமையில் உதவுதல் மனித மாண்பின் அதி உன்னதமான செயற்பாடு. இயேசுவின் போதனைகளில் மிகவும் முக்கியமானதாக இருந்தது. இயலாதவர்களுக்கு உதவுதல், கைவிடப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், நோய்வாய்ப்பட்டோர், சிறைப்பட்டோர், அநாதைகள் நொந்துபோனவர்கள், விரக்தி அடைந்தோர், துன்பத்தினைத் தாங்க முடியாதோர் போன்றவர்களை இயேசு அரவணைத்து வாழ்வு கொடுத்தார் என்று நற்செய்திகளில்

பார்க்கின்றோம். இதையே மரியாளின் வாழ்விலும் காண்கின்றோம். இப்படியான செயற்பாடு மனித மாண்பை மேம்படுத்தும் தன்மையாகக் கருதப்படுகின்றது.

இதை சிறப்பாக விளங்கப்படுத்த நல்ல சமாரியன் உவமையினை இயேசு கூறுவதைக் கேட்கின்றோம். இவ்வுவமையில் மனித மாண்பின் மேன்மையையும் மகத்துவத்தினையும் உணர முடிகின்றது.

குருக்களும் லேவியரும் மனித மாண்பினை அவமதிக்கின்றார்கள். சமாரியன் அதன் மேன்மையினை உணர்ந்து விரைவாக பணி செய்வதை உணர முடிகிறது. இப்படியான ஒரு பணியைத்தான் அன்று மரியாள் கானாவூர் திருமணத்தில் செய்தாள். தான் மனித மாண்புள்ளவள் என்பதனை எண்பித்தாள்.

## மரியாள் இயேசுவை சிலுவையோடும் சித்திரவதைப்படுத்துவோரிடையேயும் காணும் நிலை

ஒரு தாயின் அதி உச்சமான துன்பமென்று கருதுவது பிரசவ வேதனையாகும். ஆனால் அக்குழந்தை கிடைத்த அந்தக் கணமே அந்தத் துன்பத்தை மறந்துவிடுவாள். ஆனால் மரியாளின் துன்பம் தொடர் கதையாகிக் கொண்டிருக்கின்றதைக் காணமுடிகின்றது. தனது மகனைச் சிலுவையோடும் படை வீரரோடும் காணும் போது இரத்தம் உடலில் கசிகிறதையும் காணும் போது தாய்க்கு "பெத்த வயிறு பத்தி எரியுது" என்றால் போல் வேதனை அதிகரிக்கிறது. ஆனால் மரியாள் விசுவாசத்தில் தளரவில்லை. தொடர்ந்து மௌனமாகவே பயணிக்கிறாள். மீட்பின் பாதை இதுதான் என்று அறிந்தவள் மனிதாபிமானமற்றவர்களிடையே நிற்பதையிட்டு கவலையும், துன்பமும் அடைகின்றாள். "எல்லாம் இறை சித்தம் என்பதை ஏற்றுக்கொள்கின்றாள்".

## "இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள் இவர்களை மன்னியும்"

சிலுவையில் துன்பத்தில் காயங்களில் நோவால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இயேசுவின் வாயால் வந்த வார்த்தைகளாக இவை இருக்கின்றன. இப்படிப்பட்ட மனநிலையை இயேசுவுக்கு கற்றுக்கொடுத்தவள் மரியாள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

ஆகவே மரியாள் மனித மாண்பினை வளர்த்த சிறப்பான குடும்பப் பெண்ணாகவும் மனித மாண்புள்ளவளாகவும் வாழ்ந்தாள் என்பதும் புதிய ஏற்பாட்டிலுள்ள ஆதாரங்களைக் கொண்டு நிரூபிக்க முடியும். எனவே மரியாள் மனிதமாண்புள்ளவள் என்பது தெளிவு.

*திருமதி யோகராசா மரியஸ்ரலா*
உறுப்பினர்

## எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளைதான் அன்னை வளர்ப்பிலே



*இறை பக்தியுள்ள பிள்ளையாக வளர்த்தாள் (லூக் 2:42-47)*
பன்னிரெண்டு வயதில் சிறுவன் இயேசு மறைநூல் அறிஞர்களிடையேயும், மறை நூலை விளக்கம் கொடுப்பவர்களிடையேயும் நின்று அவர்களோடு வேத நூலை வாசிப்பதிலேயும் விளக்கம் கேட்பதிலேயும் விளக்கம் கொடுப்பதிலேயும் ஜெருசலேம் தேவாலயத்தில் ஆர்வமாக நின்றார் என்பது தெளிவாகிறது. ஆலயத்திற்கு செல்வது ஆண்டவனை தொழுவதற்கும் ஆண்டவருடைய அலுவல்களில் ஈடுபடுவதற்கும் என்பதை சிறுவன் இயேசு மிகத் தெளிவாகக் காட்டியுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது. இது ஒரு தாய் தனது பிள்ளைக்கு கற்றுக்கொடுத்த விடயம் என்பதும் புரியக்கூடியதாக உள்ளது.

*பெற்றோருக்கு அமைச்சலுள்ள பிள்ளையாக மரியாள் வளர்த்தார் (லூக் 2:52)*
அறிவிலும் ஞானத்திலும் சிறந்தோங்கினார் என்று லூக்கா நற்செய்தி சொல்கிறது. முப்பது வருடங்கள் பெற்றோரோடு வளர்ந்தார் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறதை அவதானிக்கலாம். பெற்றோருக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்தார் என்று எண்பிக்கப்படுவதையும் காணலாம். இறுதி வரைக்கும் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார் என்று கூறப்படுகிறது. எவ்வளவிற்கு பெற்றோருக்குக் கீழ்ப்படிவுள்ள பிள்ளையாக திகழ்ந்தார் என்றால் அவருடைய பணி வாழ்வில் "தூய பவுல்" அடிகளார் குறிப்பிடும் போது 'கடவுள் தன்மையில் விளங்கிய அவர் அதை இணையாக பிடித்துக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதாமல் மனிதத் தன்மை பூண்டு, அதுவும் அடிமையாகி அதிலும் கீழாக சிலுவை சாவை ஏற்குமளவிற்கு தம்மை தாழ்த்தி கீழ்ப்படிந்தார் என்று பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார். "தந்தையே இந்த துன்பக்கலம் என்னைவிட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பமல்ல உம்முடைய விருப்பமே நிறைவேறட்டும் என்று சிலுவை சாவை ஏற்றுக்கொண்டார். இது எதை எமக்கு எண்பிக்கிறது என்றால் கீழ்ப்படிவுள்ள அமைச்சலுள்ள பிள்ளையாக சிறு வயதிலிருந்தே அவருடைய பெற்றோர் அவரை வளர்த்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

*தெளிவான பார்வையுள்ள பிள்ளை அதாவது உலகத்தின் போக்குகளுக்கு தன்னை உட்படுத்தாதவர்*
"ஆண்டவரின் ஆவி என்மேலுள்ளது. ஏனெனில் என்னை அபிசேகம் செய்துள்ளார்" (லூக் 4:18-19). இவ்வார்த்தைகள் இயேசுவின் பணிவாழ்வை இரத்தின சுருக்கமாக எடுத்துக் காட்டுகிறது. எப்படியான பணியை யாருக்கு செய்யப் போகிறார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறதைக் காணலாம்.

"ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க
சிறைப்பட்டோர் விடுதலை அடைய
பார்வையற்றோர் பார்வை பெற
ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெற
எல்லோருக்கும் அருள்தரும் ஆண்டவரை அறிவிக்க"

இவ்வகைப் பணியைச் செய்ய தெளிவான பார்வை உள்ளவராகவும், உலகத்தின் போக்குகளுக்கு அடிபணியாமல் யாவற்றையும் உடைத்தெறிந்து மீட்பை எல்லோரும் கண்டடைய வழிவகுத்தார்.

எனவே இந்த சிறப்பான பண்புகளையும் மரியாள் சிறு வயதிலிருந்தே இயேசுவிற்கு பயிற்றுவித்து வளர்ந்தாள் என்பது தெளிவாகக் காணலாம்.

"நல்ல மரம் நற்கனி கொடுக்கும்"

*திருமதி கமில்ரன் விஜயகுமாரி*
உறுப்பினர்

## "தெசரா காட் விளக்கம்"



"தெசரா" என்பதன் பொருள் "சேனையின் செபக்கொத்து என்பதாகும். தெசரா எனும் பொருள் எவ்வாறு உருவானது என்பதைப் பார்க்கும் போது நண்பர்களும் அவருடைய குடும்பத்தாரும் ஒருவர் ஒருவரை அறிந்து கொள்ளும் பொருட்டுத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளும் நினைவுச் சின்னத்திற்குத்தான் இலத்தீன் மொழியில் "தெசரா" எனும் பெயர் வழங்கப்பட்டது. இது உரோமைப் பேரரசு போர் வீரர்களுடைய விருது மொழி பொறித்த தகடொன்றிற்கும் "தெசரா" எனும் பெயர் வழங்கப்பட்டிருக்கின்றது. இதனைவிடவும் மரியாயின் சேனை தன் செபங்களும், படங்களையும் அடங்கிய துண்டு வெளியீட்டிற்கும் "தெசரா" எனும் பெயர் வைத்துள்ளது. இதன் பிரதான நோக்கங்களாக

- இந்தத் துண்டு வெளியீடு சேனையர் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்
- சேனையின் விருது மொழி கொண்டே செபங்கள் இதில் அடங்கியிருக்கின்றன
- சேனையரிடம் எப்பொழுதும் விளங்க வேண்டிய ஒற்றுமைக்கும், சகோதர மனப்பான்மைக்கும் ஒரு சின்னம்

சேனையில் பயன்படுத்தப்படுகின்ற இந்தச் சொல் பரந்த கண்ணோட்டத்தோடே நோக்கப்படுகின்றது. இது அந்நிய மொழியில் உருவாக்கப்பட்டிருக்கும் என்ற நோக்கம் கூட அழிக்கப்பட்டு விடும். இதனை அழிக்க யாருக்கும் அனுமதி இல்லை என்றும் இந்த "தெசரா" என்ற இலத்தீன் சொல் சேனைச் சொல்லாக மாறி ஆழமாக வேரூன்றி விட்டது. இதன் பயனுள்ள தனிப்பட்ட அழகை அகற்றுவது சேனைக்குச் செய்யும் பெரிய அநீதியாகும். எனவே நாம் "தெசரா" என்ற எம் சேனைக்குரிய சொல்லை எமது அடையாளச் சொல்லாக ஏற்றுக் கொள்வோம்.

*திருமதி ஜெயராஜ் நஞ்சினி*
உறுப்பினர்

# சேனைப்படம்



நூலின் முன் அட்டையில் சேனைப்படம் கலையம்சம் பொருந்தியதாக வரையப்பட்டுள்ளது. இப்படம் டப்ளின் நகரைச் சேர்ந்த இளம் ஓவிய வல்லுனர் ஒருவரால் வரையப்பட்டு சேனைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்த ஓவியம் கலையழகும் கருத்தாழமும் நிறைந்ததாக எழில் குன்றாமல் அமைந்துள்ளது. இந்தப் படம் சேனையின் பக்திநெறியை விளக்கிக் காட்டுகிறது.

சேனையின் செபங்கள் இந்தப் படத்தில் தெளிவாக சித்தரிக்கப்பட்டுள்ளது. தூய ஆவியின் மன்றாட்டையும் செபமாலையையும் விளக்க மாடப்புறா மரியன்னையின் மீது நிழலிட்டு அவளைத் தம் அன்பின் நெருப்பாலும் ஒளியாலும் நிரப்புவதாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. பெந்தக்கோஸ்தே நாளன்று தூய ஆவி இறங்கி வந்ததையும் இப்படம் சித்தரிக்கின்றது.

சேனையின் சங்கிலிச் செபத்தையும் இந்தப்படம் சித்தரிக்கின்றது. அவள் வைகறை விண்மீன் என்பதைக் காட்ட அவளது நெற்றியில் ஒரு விண்மீன் வீசித் திகழ்கின்றது. மரியன்னை கடவுளைப் புகழ்ந்து பாடிய "மாக்னிபிகாட்" என்னும் கீதமும் சேனைப்படத்தில் இடம்பெறுகிறது. அவளது உள்ளத்தை ஆட்கொண்ட அந்தப் பாடலின் முதலடி மிகப் பொருத்தமாக அவளுடைய தலைக்கு மேலே முதலெழுத்துக்களால் வரையப் பெற்றிருக்கின்றது. பாம்பின் தலையை நசுக்கும் விதத்தில் சேனைப் படத்தில் மரியாள் சித்தரிக்கப்பட்டிருப்பது அவளுடைய அமல உற்பவத்தை நமக்கு நினைவூட்டுகின்றது. 'உனக்கும் பெண்ணுக்கும் பகையை உண்டாக்குவேன் அவள் வித்து உன்னுடைய தலையை நசுக்கும்" எனும் வாக்கியம் படத்தின் விளிம்புகளில் பொறிக்கப்பட்டுள்ளது. சேனையுடன் தீமையின் சக்திகள் படு தோல்வியுற்று சிதறி ஓடும் போராட்டமும் படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

படத்தின் உச்சியில் எல்லா வரங்களுக்கும் உறைவிடமாக தூய ஆவி காட்சியளிக்கின்றார். அடியில் நல்லவர்களும் தீயவர்களும் நிற்கிறார்கள். நடுவில் அருள் மிகப்பெற்ற மரியா அன்பு நெருப்பால் சூழப்பெற்று எல்லா வரங்களையும் பகிர்ந்து தரும் முறையில் காட்சியளிக்கிறார். அம்மா இவரே, உம்மகன் "இவரே உம்தாய்" என்னும் வாக்கியம் படத்தின் விளிம்புகளில் பொறிக்கப்பட்டுள்ள சேனையின் கடைசிச் செபத்தைப் படத்தில் ஒவ்வொரு வரியும் பிரதிபலிக்கின்றது. சேனைப்படத்தில் வரையப்பட்டுள்ள நெருப்புத்தூண் உயிருள்ள விசுவாசத்தைக் குறிக்கின்றது. கன்னி மரியாள்தான் இந்த நெருப்புத்தூண், விசுவசித்தவராகிய நீரே ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று படத்தின் விளிம்புகளில் எழுதப்பட்டுள்ளது.

*திருமதி மரியநாதன் புஸ்பராணி*
செயலாளர்
சருவேசுரனுடைய அர்ச். மாதா பிரசீடியம், உரும்பிராய்.

# ஜூபிலி விழா சிறப்புற கைகொடுத்தோர்

திரு. திருமதி றேமன் லியோ (லண்டன்)

திரு. திருமதி மகாலிங்கம் நீற்றா (லண்டன்)

திரு. திருமதி ஜோர்ச் (கனடா) ஏசியனா நகைகடை

திரு. திருமதி மனுவேற்பிள்ளை ஜெபர்சன் (சுவிஸ்)

திருமதி மரியதாஸ் மதுரநாயகி (லண்டன்)

திருமதி தைரியநாதன் யேசுமலர் (கனடா)

திரு. திருமதி மோகன் றோய்மாலா (லண்டன்)

திரு. திருமதி யோசப் லியோனா (லண்டன்)

**செபத்துடன் கூடிய நன்றிகள்**

## மலர்க்குழு

அருட்தந்தை ஆ. யூட் நிக்சன் (பங்குத்தந்தை)
திருமதி பேரின்பநாதன் தவமணி
திருமதி தர்மலிங்கம் ஜெயரஞ்சினி
திருமதி வடிவேல் பேரின்பம்
திருமதி யோசேப் எலிசபெத்




Printed by: J.S Printers,
077 759 3810